JL
R673[illegible]211, N28
民82.5.9.
187167

314

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 5—No. 9.

…7 OCT 193…

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் ரு | ஆங்கீரச ஆண்டு புரட்டாசித் திங்கள் 1932 ஞு செப்டம்பர்மீ | இதழ் கூ |

உள்ளுறை

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| திருநாளைப்போவார் | உகஎ |
| ஒளி | உஉகூ |
| சமாதான உரை | உஉஅ |
| திருவாசகத்தில் ஒரு மணிவாசகம் | உ௩௦ |
| காவலூரில் நல்விழா | உ௩உ |
| உமாபதிசிவனார் திரட்டியருளிய அருள்முறைத்திரட்டு உரை | உ௩௩ |
| திருவாசகம் உரையுடன் | அக-கூசு |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—திரு. வி.. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1932 வெளி நாட்டுக்கு ரூ. 2-8-0.
தனிப் பிரதி அணா 4.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாதவூரடிகள் புராண சாரம்

[பரிமணங்குடி - தமிழ் வித்வான் - முத்துப் பிள்ளை]

## ஆசிரிய விருத்தம்

திருமவுலி சூடியுமை சிவனுக்ர குமரன்முறை
செங்கோல் செலுத்தி யரசாள்
தென்னாட்டில் வாதவூர்ப் பனவகுல மணியாச்
செனித்து மறையாகம மெலாக்
தேர்ந்துதென் னன்பிரம ராயனென் றிடுபெயர்
சிறந்தமைச் சுரிமை தாங்கிச்
சிவிகையி லிவர்ந்துதுர கதம்வாங்க வருவழிச்
செலவிற் பெருந்து றையெனும்

ஒருநக ரடைந்துநிழல் விரிகுருந் தடியின்க
ணுற்றான் பரம குருவா
யுயர்சூக்க வைந்தெழுத் துண்மையுப தேசம
துணர்த்த வன்புரு வாகியுள்
ளுருகிமொழி தமிழினை யுவந்தான்ம நாயக
னுரைக்கு மணிவாச கப்பே
ருற்றுநிதி முற்றுமச் சிவதிருப் பணியினுக்
குய்த்து மதுரா புரியினை

மருவிய மறைமுதல்வன் நரிபரிய தாக்கொண்டு
வந்துபின் முன்னை யுருவ
மன்னிட வமைக்க வரிமர்த்தனன் வெகுண்டுபுரி
வன்றுயர் பொறுத்து பின்னும்
வைகை பெருகச்செய்து வந்தியுதிர் பிட்டிற்கு
மண்ணைச் சுமந்து பெற்ற
மாறன் பிரம்பினடி யாங்களும் விழக்காட்டி
மறைதர மருண்டு வழுதி

யிருகரங் கூப்பிடத் துறவுபூண் டளவில்தல
மெல்லாம் பணிந்து தில்லை
யெய்தியெதிர் புத்தர்தமை வென்றூமை பேச
வீய்ந்து மன்றுடை யார்கரத்
தெழுதவிரு திருமுறை யியம்பி யவரேபொரு
ளெனச்சுட்டி நடரா ஜர்பொன்
னிணையடியின் மிதுனமதி மகநாட் கலந்துற்ற
விறையவனை யேத்து வோமே.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

27 OCT 1932

# சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு"

மலர் ரு | ஆங்கீரச ஆண்டு புரட்டாசித் திங்கள் 1932 ௵ செப்டம்பர்மீ | இதழ் ௯

## திருநாளைப்போவார்

[பத்திராசிரியர்]

*திருவுடைய தில்லைவா ழந்தணர்கள் கைதொழுதார்*
*பாவரிய தொண்டர்களும் பணிந்துமனங் களிபயின்றார்*
*அருமறைசூழ் திருமன்றில் ஆடுகின்ற கழல்வணங்க*
*வருகின்றார் திருநாளைப் போவாராம் மறைமுனிவர்.*—**சேக்கிழார்.**

**சை**வசித்தாந்தத்தின் சிறந்த கொள்கைகளுள் ஒன்று, சிவபரம்பொருளாகிய முழுமுதற் கடவுளின்மீது ஆராத காதலுடைய மெய்யடியார்கட்கு உடல் பொருள் ஆவி என்னும் மூன்றினிலாகும் தடைகள் சூரியனைக்கண்ட பனிபோல் விட்டகலும் என்பது. இவற்றுள் உடல்பற்றிய (தடை அல்லது கட்டுப்பாடாகிய) சாதியைத் தமது மெய்யன்பினால் வென்ற பெருமைக்கு மலையிலக்காகவுள்ளவர் திருநாளைப் போவார். அவரது திருநக்ஷத்திரம் நாளது புரட்டாசிமீ ௬-ம் தேதி (21-9-1932) புதன்கிழமையன்று வருகிறது. அந்நாளில் திருநாளைப் போவார் திருக்குலத்தவரும், ஏனைய உயர் குலத்தினர் என்று செருக்கித் தருக்கி மலைவோரும் நாளைப் போவார் மெய்ச் சரிதையைப் பயின்று அதன்கணுள்ள சாத்திர நுட்பங்களைக் கைக்கொண்டு ஒழுகுமாறு வேண்டுகின்றோம். அதற்குதவியாக ஈண்டு நமது சிற்றறிவிற் கெட்டிய சிறு பொருள்கள் சிலவற்றைக் குறிக்கின்றோம்.

திருநாளைப் போவார் சரித்திரம் பெரிய புராணத்துள் 37 செய்யுட்களால் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் முதல் ஐந்தில் கொள்ளிடம் பாய்

கின்ற மேற்கா நாட்டு வளனும் அந்நாட்டிலுள்ள ஆதனூரின் வளனும் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளன. பின் ஐந்து பாட்டில் ஆதனூரிலுள்ள புலைப்பாடி (=பறைச்சேரி)யின் ஒழுங்கும் ஆங்கு வசிக்கும் சிறுவர் சிறுமியர் புலைச்சியரின் ஒழுங்கும் வர்ணிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் புலையர்களை "செறிவலித்திண் கடைஞர்" என்றும், புலைச்சியரை "புன் புலைச்சியர்கள் கள்ளுண்டு களிதூங்க" என்றும் சேக்கிழார் கூறுவது நோக்கத்தக்கது. இத்தகைய "கடைஞர் இருப்பின்" பால் "மெய்ப்பரிவு சிவன் கழற்கே விளைத்த வுணர்வோடும்" ஒப்பில்லாத நந்தனார் என்றொருவர் வாழ்ந்திருந்தார். அவர் சிவபெருமான்மீது வைத்த,

"சிறந்தபெருங் காதலினால் செம்மைபுரி சிந்தையராய்
மறந்துமயல் நினைவின்றி வருபிறப்பின் வழிவந்த
அறம்புரி கொள்கையராயே அடித்தொண்டின் நெறிநின்றார்"

அதாவது எவ்வுயிர்க்கும் தீங்கிழைக்காத செம்மை யுடையராய்ப் பொருளல்லவற்றைப் பொருளெனக் கொள்ளும் மயக்கவுணர்ச்சி சிறிதுமின்றி, தாம்பிறந்த குலத்துக்கேற்ற தருமத்தையே செய்யும் உறுதியையே (இங்கு ஏகாரம் மிகவும் கவனிக்கற்பாலது) உடையாராய், சிவபெருமான் திருவடித் தொண்டெனும் செந்நெறியில் நின்றார் என்பது பொருள். எனவே, தமது குலத்துக்கேற்ப,

"சார்பில்வரும் தொழில்செய்வார் தலைநின்றார் தொண்டினால்"

(அதாவது தொண்டுபுரிந்து தலைமைபெற்று விளங்கினார்.) சிவபெருமான் கோயில்கட்குப் பேரிகைத்தோல், வீணையாழ் நரம்பு, அருச்சனைக் கோரோசனை முதலியன தந்தார்.

"இவ்வகையால் தந்தொழிலின் இயன்றவெலாம் எவ்விடத்தும்
செய்வனவும் கோயில்களில் திருவாயில் புறநின்று
மெய்விரவு பேரன்பு மிகுதியினால் ஆடுதலும்
அவ்வியல்பிற் பாடுதலு மாய்நிகழ்வார் அந்நாளில்"

(அதாவது, தம்மால் இயன்றவற்றை யெல்லாம் செய்து, கோயில்களின் கோபுர வாயில்கட்குப் புறத்தே நின்று உண்மைப் பேரன்பின்மிகுதியால் ஆடல் பாடல் நிகழ்த்துவார்.)

ஒருநாள் திருப்புன்கூரைத் தரிசிக்க எண்ணி ஆங்குள்ள சிவாலயத்தினருகிற் சென்று,

"சீரேறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேதும் பிடவேண்டும் எனநினைந்தார்"

உடனே சிவபெருமான் தனது சந்நிதிக் கெதிரில் மலைபோலுள்ள நந்திதேவரை விலக்கித் தன்னைப் புலப்படுத்தினார். நந்தனாரும் திருவாயில் முன்னின்று பணிந்தெழுந்து ஒரு குளத்தையும் வெட்டி யுதவினார். பிறகு "கோயில் வலங்கொண்டு பணிந்தெழுந்து" திரும்பினார்.

இவ்வாறு பல தலங்களில் வணங்கி, தொண்டு செய்து வந்த நந்த[illegible]கெழுந்த, சித்தமோடும் திருத்தில்லைத் திருமன்று சென்



றிறைஞ்ச, உய்த்த பெருங்காதல் உணர்வொழியாது" வந்துதித்தது. இந்தக் காதல் மிகுதியால் தூக்கமின்றி மறுநாள் "அங்கெய்த, (=அதாவது சிதம்பரம் போக), ஒன்றி அணைதரு தன்மை உறுகுலத் தோடிசைவில்லை, என்றிதுவும் எம்பெருமான் ஏவலெனப் போக்கொழிவார்." அதாவது சிதம்பரம் போய் தரிசிப்பது தம் குலத்துக்கு அடாது, இது இறைவன் கட்டளை யென்று போகாதிருப்பார். "நன்று மெழுங்காதல் மிக நாளைப் போவேன் என்பார்" (மீண்டும் அவ்வன்பு பொங்க 'நாளைப் போவேன்' என்பார்.) இவ்வாறு கூறியதால் இவருக்கு 'நாளைப் போவார்' என்ற பெயர் உண்டாயிற்று.

நாளை, நாளை யென்று நாட்கள் செல்வதைப் பொறுக்காமல் "பிறவிப் பிணிப்பொழிய" ஒருநாள் புறப்பட்டுத் தில்லையின் எல்லையை யடைந்தார். ஆங்கு தில்லை வாழந்தணரின் வேள்விப்புகை கண்டும், மறையொலி கேட்டும் அஞ்சி நின்றார். மீண்டும் தில்லையின் பெருமையை நினைந்து ஊரைச் சூழ்ந்துள்ள மதிற்சுவரின் வாயிலின் உள்புகுந்தார். (இச்சுவர் இப்போதில்லை). ஆங்குள்ள உயர்ந்த மாளிகைகளையும் அவைகளினின்றெழும் வேதிகைகளையும் கண்டு,

"இப்பரிசாயிருக்க எனக்கு எய்தல் அரிதென்று அஞ்சி
அப்பதியின் மதிற்புறத்தின் ஆராத பெருங்காதல்
ஒப்பரிதாய் வளர்ந்தோங்க உள்ளுருகிக் கைதொழுதே
செப்பரிய திருவெல்லை வலங்கொண்டு செல்கின்றார்"

இவ்வாறு இரவும் பகலும் எல்லை வலஞ்செய்வார் ஒருநாள் "திருமிடற்றார் மன்றின் நடங் கும்பிடுவ தெவ்வண்ணம் என நினைந்தே" கவலையுடன் துயின்றார். இவ்வாறு "இன்னல்தரும் இழிபிறவி இதுதடையென்றே" வருந்தி நித்திரை செய்யும் நந்தனாருடைய சொப்பனத்தில் நடராஜர் வந்து,

"இப்பிறவி போய்நீங்க எரியினிடை நீமூழ்கி
முப்புரிநூல் மார்பருடன் முன்னணைவாய்"

என்று கூறித் தில்லைவாழந்தணர்க்கும் எரி வளர்க்குமாறு கட்டளையிட்டார். இதைக் கேட்ட தில்லைவாழந்தணர் நந்தனாரிடம் சென்று,

"ஐயரே அம்பலவர் அருளால் இப்பொழு தணைந்தோம்
வெய்யஅழல் அமைத்து உமக்குத் தரவேண்டி யெனவிளம்ப
நையுமனத் திருத்தொண்டர் 'நான்உய்ந்தேன்' எனத்தொழுதார்"

பிறகு தென் மதிற்புறத்தில் தீ வளர்க்கப் பட்டது. இறைவனை நினைந்து தீயை வலம்வந்து நந்தனார்,

"கைதொழுது நடம்ஆடுங் கழல்உன்னி அழல்புக்கார்
எய்தியஅப் பொழுதின்கண் எரியின்கண் இம்மாயப்
பொய்தகையும் உருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார்"

(அதாவது தீயில் புகுந்தவர் தமது உடலைத் துறந்து சிவ முனிவர் வேடத்தோடும் எழுந்தார்.) செந்தீயிலிருந்து இவர் எழுந்தது செந்

தாமரையில் பிரமன் தோன்றியதுபோ லிருந்தது. தேவதுந்துபி முழங்கிற்று; வானவர் மலர்மாரி பொழிந்தனர். தில்லைவாழந்தணர் தொழுது நின்றார். அவர்களுடன் சென்று கோபுரம் தொழுது புக்கு,

> " உலகுய்ய நடமாடும்
> எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களும் கண்டிலரால் "

(அதாவது சிற்றம்பலம் புகுந்தவுடன் ஒருவரும் காணுதவாறு மறைந்தார்.) எனவே நந்தனார்,

> " மாசுடம்பு விடத்தீயின் மஞ்சனம்செய் தருளிஎழுந்து
> ஆசில்மறை முனியாகி அம்பலவர் தாளடைந்தார் "

என்பது பெற்றும்.

மேற்கூறிய விவரங்கள்மட்டும் அடங்கிய வரலாறு பக்திரசம் ததும்பும் ஒரு தீம்கனியாகச் சேக்கிழார் பெருமானால் நமக்களிக்கப்பட்டுள்ளது. இந்த ரசம் ஒன்று போதாதென்று கருதி சிருங்கார ரசம், சோக ரசம், ஹாஸ்யரசம் முதலியவைகளைப் புகுத்தி இவ்வுண்மை வரலாற்றைத் திரித்துப் பல புதிய விஷயங்களைச் சேர்ந்து நந்தனார் நாடகமாகவும், நந்தனார் சரித்திரக் கீர்த்தனை காலக்ஷேபங்களாகவும் இவ்வரலாறு உலவி வருவதைக் காண்கின்றோம். நந்தனார் ஓரந்தணரிடம் அடிமையாதல், நந்தனாருக்குப் பைத்தியம் பிடித்தல், சேரியில் பூசைபோடுதல், பெரிய கிழவன் வருதல், நந்தனார் எஜமானனை வேண்டுதல், நந்தனாருக்காகச் சிவ பூதங்கள் ஓரே இரவில் உழுது விரைப்பதுமுதல் கதிரறுத்தல்வரை எல்லாம் செய்தல், நந்தனார் வேதியருக்கு உபதேசித்தல் முதலிய பல விஷயங்கள் கர்ண பரம்பரையாகவோ தலபுராணங்கள் மூலமாகவோ கலந்துள்ளன. இவற்றையெல்லாம் கருத்தில் வையாமல் சேக்கிழார் பெருமானது உண்மை வரலாற்றின் உள்ளக்கிடக்கையை ஆராய்வோம்.

இவ்வாராய்ச்சியில் நுழையுங்கால் சில விஷயங்களை நன்றாய் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் வாழும் இவ்விருபதாம் நூற்றாண்டின் குறிக்கோள்களும், சமூகச் சீர்திருத்தக்கொள்கைகளும், அரசியற்கிளர்ச்சிகளும், சமவுரிமைப் பேச்சுகளும், வகுப்புவாதப் பூசல்களும், இன்ன பிறவும் சேக்கிழார் காலத்தில் இல்லை. எனவே இவைகளிற் படிந்த மனதோடு சேக்கிழார் கூறும் வரலாற்றை ஆராய்வது உண்மையை நல்காது. சேக்கிழார் திருவாக்கில் இவைகளைப் புகுத்திப் பொருள் கூறுவதும், பொருந்தாத இடங்கள் " சேக்கிழார் வாக்கல்ல, இடைச் செருகல்கள் " என்று ஒதுக்குவதும் அவருக்குச் செய்த அபசாரங்களாகவே அறிஞரால் எண்ணப்படும்.

'செறிவலித்திண் கடைஞர்,' 'கடைஞர் இருப்பின்,' 'இழிபிறவி இது தடை,' 'மாசுடம்பு விடத்தீயின்,' என்ற வாக்குகளிலிருந்து புலையரை இழிந்த பிறப்பினராகவும், குலவரிசையில் கடைசியராகவும் கருதுவது சேக்கிழாருக்கு உடன்பாடு என்பது வெளிப்படை. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும், சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால் " என்பது திருக்



குறள். செய் தொழில் வேற்றுமையே குலவேற்றுமையையும் உயர்வு தாழ்வையும் உண்டாக்கிற்று. இச்செய் தொழில் வேற்றுமை குலத்தையும் உயர்வு தாழ்வையும் உண்டாக்குதல் தவறென்றும் அவைகள் சமூகத்தில் இருத்தல் கூடாதென்றும் நம்போன்றே சேக்கிழாரும் எண்ணியிருத்தல் கூடும். என்றாலும் சேக்கிழார் அவைகளைப் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் பெரிய புராணம் முழுமையும் அவைகளை அன்பினால் வெல்லும் நெறியின் மாண்பையே அவர் உயர்த்திக் கூறுகின்றார். எனவே, அவர் காலத்து மக்கள் எண்ணியது போலவே புலையரை இழிபிறப்பினரென்றும் கடைசியரென்றும் சேக்கிழார் கூறுவதில் இழுக்கில்லை.

இனி நந்தனார் அன்பினைக் கவனிப்போம். கள்ளும் புலாலும் கமழ்கின்ற புலைப்பாடியில் இருப்பினும் நந்தனார், "மெய்ப்பரிவு சிவன் கழற்கே விளைத்த வுணர்வொடும் வந்தார்." இதிலிருந்து தம்மைச் சுற்றியுள்ள தீமைகளிற் சாராது கடவுள்மீது உண்மையன்புடையவராய் விளங்கினமையால் நந்தனாரது மன வலிமை அறியப்படும். சார்ந்ததன் வண்ணமாதல் உயிருக்கியல்பு. எனவே, தம்மைச் சுற்றியுள்ள புலையர்களோடு கள்ளுண்டு புலாலுண்டு கூத்தாடுவது இயல்பெனினும், அதைவிட்டு நந்தனார் சிவபக்தியிற் சிறந்து விளங்கியது அவரது உயிரின் உறுதியைக் காட்டுகிறது. உயர்குடிப் பிறந்தோர் சிவபக்தியிற் சிறந்து விளங்குவதைவிட நந்தனார் விளங்கியதே மிக மேன்மையுடைத்து. உயர் குடிப்பிறந்தோர் நல்லொழுக்கத்தை விட்டு சிவபக்தி யின்றி கள்ளுண்டு புலாலுண்டு களியாட்டத்திலீடுபட்டால் அவர்களைப்புலையரினும் இழிந்தாராகக் கொள்வதே தகுதி. சேற்றில் செந்தாமரை விளைவதைப்போல் இழிபொருள்கள் சூழ்ந்துள்ள விடத்தி லிருந்தே உயர் சிவபக்தி செய்தல் கூடுமென்பதற்கு நந்தனார் ஒரு பெருஞ் சான்றாகவுள்ளார்.

நந்தனாருடைய சிவபக்தி மனதளவில் பேச்சளவில் நிற்கவில்லை. செயலிலும் விளங்கிற்று. தமது குலத்துக்கேற்ற தொண்டுபுரிவதே தகுதியென்று கருதி, கோயில்களில் பேரிகை முதலிய தோற் கருவிகட்குத் தோலும், யாழ், வீணை முதலிய நரம்புக்கருவிகட்கு நரம்பும், ஈசனார் பூசனைக்குக் கோரோசனையும்தந்து நந்தனார் தமதுபக்தியைச் செயலில் நிறுத்தினார். "வருபிறப்பின் வழிவந்த அறம்புரி கோள்கையராயே அடித்தொண்டின் நெறிநின்றார் " என்பதில் சேக்கிழார்கொடுத்துள்ள ஏகாரம் அவர்கருத்தை வலியுறுத்தும். ஏனையவழிகளில் தொண்டுசெய்யக் கருதினால் வசதிக்குறைவினால் தடைகள் நேரும். பிறகு தம்குலத்தின் இழிவு, தடைகளின் தன்மை முதலிய மலப்பொருள்களிலேயே அறிவுசெல்லும். எனவே, தமது குலத்துக்கேற்ற தொண்டாற்றியது நந்தனாரது மெய்யன்பின் தன்மையை விளக்குகின்றது.

இனி நந்தனாரது அன்பின் தன்மையை நோக்குவாம். "கோயில்களில் திருவாயில் புறநின்று மெய்விரவு பேரன்பு மிகுதியினால் ஆடுதலும், அவ்வியல்பிற் பாடுதலும்" செய்தார். கோபுரவாசலுக்கு நேரே நிற்காமல் புறமாக நின்று உள்ளிருக்கும் இறைவனை மனக் கண்ணினாற் கண்டு தொழு

மவர்க்குப் பேரன்பு மிகுதியும் ஆடல்பாடலும் உண்டாயின. உயர்குலச் செருக்குடையோர் இறைவன் திருமுன்பு சென்றும் கல்மனத்தராய் ஊர் வம்புகளைப் பேசுவதும் அன்பற்ற செயல்களைப் புரிவதும் இந்நாளில் நாம் கண்கூடாகக் காண்பதொன்று. இதிலிருந்தும் நந்தனார் அன்பின் மேன்மை புலப்படும்.

இனி நந்தனாரது அன்பு வளரும் முறையைக் கவனிப்போம். திருவாயில் புறநின்று வணங்கிய பேரன்பு முதிர்ந்து, திருப்புன்கூரில் திருவாயில் நேரே கும்பிட வேண்டுமென்ற நினைப்பை உண்டாக்கிற்று. இஃது அன்பின் முதிர்ச்சியால் உண்டாய ஆசையே ஒழிய இக்காலத்திய கிளர்ச்சிக்காரரைப்போல் சமவுரிமை பாராட்டி யெழுந்த உணர்ச்சியல்ல வென்பது நோக்கத்தக்கது. அன்பு ஒன்றுக்கே கட்டுப்பட்ட இறைவன் நந்திதேவரை விலக்கி நந்தனாருக்குத் தரிசனம் தந்தார். நந்தனார் நேர் நின்று கும்பிட வேண்டினாரே தவிர உள்நுழைந்து கும்பிட எண்ணவில்லை. எனவே, இறைவனும் 'உள்நுழை' யென்று கட்டளையிடவில்லை. வேண்டுவார் வேண்டுவதே ஈதல் இறைவன் தொழின் முறைமையாதலின்.

இனி, நந்தனாரது பேரன்பு முற்றிய வரலாற்றை உன்னுவாம். நாளுக்குநாள் சிவபக்தி வளர்ந்துவரத் திடீரென்று ஒருநாள் நந்தனாருக்குச் சிதம்பர தரிசனம் செய்யவேண்டுமென்ற பெருங்காதல் உதித்தது. இதன் காரணமும் அன்பின் முதிர்ச்சியே யொழிய உரிமையுணர்ச்சியல்ல. இக்காதல் வழி மனம் செல்ல, "உறுகுலத்தோடிசைவில்லை என்றிதுவும் எம்பெருமான் ஏவல்" என்று தமது மனதைச் சமாதானம் செய்துகொண்டு 'நாளைப் போவேன் நாளைப் போவேன்' என்று கூறி நந்தனார் 'நாளைப் போவார்' ஆயினார். தமது குலத்தவர்கட்குக் கோயில் நுழைவில்லையென்ற திட்டத்தை "இதுவும் எம்பெருமான் ஏவல்" என்றே நினைந்து, நந்தனார் தமது மனதைச் சாந்தம் செய்துகொண்டதும் கிளர்ச்சிக்காரர்கட்கொரு பாடமாகும்.

அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாழ்? இல்லையாகலின், நந்தனாரது கரை கடந்த பேரன்பு அவரைத் தில்லையெல்லைக்குச் செலுத்திற்று. அதை வலம் வந்து வேள்விப் புகைகண்டு மறையோசை கேட்டுத் தமது குலம் நினைந்து உட்செல்ல அஞ்சினார். பிறகு தில்லை மன்றின் பெருமையினை நினைக்கும் நினைப்பு மீதூர, துணிந்து மதில் திருவாயிலின் உள்ளே புகுந்தார். ஆங்குள்ள வேதிகைகளைக்கண்டு தம் பிறவி நினைந்து மீண்டும் வெளியே சென்றார். தாம் உள்ளே நுழையக் கூடவில்லையே என்ற உணர்ச்சியினால் அவரது பக்தியும் மெய்யன்பும் எள்ளளவும் குறையவில்லையென்பது பெரிதும் நோக்கத்தக்கது. தாங்கள் நினைத்த காரியங்கட்காகக் கோயில் சென்று பிறகு காரியங் கைகூடாவிடில் 'இந்த சுவாமிக்குக் கண்ணில்லையா, இந்தப் பாழுங் கோயிலில் இடிவிழாதா' என்றெல்லாம் தங்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டியளக்கும் 'உயர்குலத்து மெய்யடியார்கள்' எத்தனை பேரை நாம் காண்கிறோம். இவர்களோடு நந்தனாரை ஒப்பிடுக. நந்தனார் தமக்கென ஒன்றும் வேண்டவில்லை. இறைவனைத் தரிசிக்கும் ஆசையைத் தவிர வேறெவ்வித ஆசையும் அவருக்கில்லை. தமது



குலத்தினால் உண்டான தடையினால் அவரது மெய்யன்பு ஒரு சிறிதும் குன்றவே யில்லை; நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போயிற்று.

"ஆராத பெருங்காதல்
ஒப்பரிதாய் வளர்ந்தோங்க உள்ளுருகிக் கைதொழுதே
செப்பரிய திருவெல்லை வலங்கொண்டு செல்கின்றார்"

என்பது சேக்கிழார் மணிவாக்கு. இதில் ஒவ்வொரு சொல்லையும் பன்முறை நோக்குக. இறைவன் சந்நிதியில் போக முடியவில்லையே என்ற வருத்தம் ஒருபால் உறுத்துங்காலும், எல்லையை மட்டும் வலஞ்செய்யுங் காலத்திலும் நந்தனார் 'ஆராத பெருங் காதல் ஒப்பரிதாய் வளர்ந்தோங்க உள்ளுருகிக் கை தொழுதார்'. இறைவன் திருமுன்பு நின்று விபூதி உருத்திராக்கமணிந்து தேவார திருவாசகங்களை உரத்த குரலிற் பாடும் உயர்குலத்துப் புல்லுருவங்களுக்கு ஆராத பெருங்காதலில்லை; அது ஒப்பரிதாய் வளர்ந்தோங்குவதில்லை; உள்ளுருகக் கைதொழும் செயலுமில்லை என்பது மிகையாகாது.

இவ்வாறு எல்லை வலஞ்செய்வதில் சிலநாட்கள் கழிந்தன. நந்தனாரது ஆராத பெருங்காதல் மீண்டும் பெருவெள்ளம்போற் பெருகிற்று. திருவாயிற் புறம், திருவாயில் நேர், தில்லையெல்லை என்ற மூன்று படிகளையும் கடந்து அவ்வன்புவெள்ளம் தில்லைத்திரு மன்றில் நுழைந்தது. பிறவியினால் உண்டாம் தடையை வெல்லும் ஆற்றல் நந்தனாரது பேரன்பின் பெருக்குக்கு வந்துளது என்ற பக்குவத்தை நன்கறிந்த இறைவன், கனவில் நந்தனாருக்குத் தீக்குளித்து உட்புகுமாறும் தில்லை வாழந்தணர்க்கு நந்தனாரை ஏற்குமாறும் கட்டளையிட்டார்.

இங்கே ஒரு நவீன ஆராய்ச்சி உண்டு. "இப்பிறவி போய் நீங்க எரியினிடை நீ மூழ்கி......மேவினார்" என்று இறைவன் கூறியதாகச் சேக்கிழார் சொல்வது சேக்கிழார் வாக்கல்ல, பிற்காலத்து இடைச் செருகல் என்றும், பாட்டின் போக்கும் பிறவும் இதை வலியுறுத்தும் என்றும் சில பேரறிஞர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இறைவனுக்குச் சாதி வேற்றுமை, தீண்டாமை முதலிய கொள்கைகள் உண்டென்று ஏற்பட்டு விடுமாம். அதற்காக இப்பாட்டில் இறைவன் வாக்காகச் சேக்கிழார் கூறுவது தவறென்றெண்ணி, சேக்கிழார் வாக்கேயல்லவென்பது பொருத்தமாம். இவ்வாறு பொருள் கூறுவதைவிட வேறொரு வழியில் பொருள் கொண்டு இறைவன் திருவாக்கின் மேன்மையையும் சேக்கிழார் வாக்கே யென்பதையும் வலியுறுத்துவதே விசேஷமென அப்பேரறிஞர்கட்கு விண்ணப்பித்துக் கொள்கிறேன். அஃது பின் வருமாறு:—

"ஏ! தில்லை வாழந்தணர்களே! நீங்கள் நாடோறும் என்னைத் தொழுகின்றீர்கள். என் உருவமாகிய தீயை வளர்க்கின்றீர்கள். என்றாலும் இப்புறப்பூசைகளினால் உங்கள் அன்பு இன்னம் முதிர்ச்சி யடையவில்லை. இப்பூசை வசதிகளெல்லாம் இல்லாத இழிகுலத்தான் ஒருவன் எல்லைப்புறத்தில் உள்ளான். என்னைக்கண்டு தொழும் வசதியை நீங்கள் அவனுக்குத் தா

வில்லை யாயினும் உங்களைவிட அவனே என்மீதுள்ள அன்பிற் சிறந்தவன். அவனது பக்திக்கு ஓரளவும் எல்லையுமில்லை. அவன் பூசுநீறுபோல் உள்ளும் புனிதன். பூதமைந்து நிலையிற் கலங்கினும் என்னை மறவான். ஓதுகாதலுரைப்பின் நெறிநின்றான். கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்குகின்றான். ஈரஅன்பினன், யாதுங் குறைவிலா வீரன். அவனது பெருமையை உங்களுக்குக் கண்கூடாகக் காட்ட விரும்புகிறேன். நீங்கள் சுடுமென்று அஞ்சுகிற என் உருவமாகிய தீயை எழுப்புங்கள். அவன் அதனுட் புகுந்து 'புண்ணியமா முனிவடிவாய், மெய்திகழும் வெண்ணூல் விளங்க வேணி முடிகொண் டெழுவான்'; என்மீது யார் உண்மையான அன்பு செலுத்துகிறார்களோ அவர்களுக்குள்ள இடையூறுகளை விலக்கி அவர்களை என் திருவடிபால் அணைவிப்பதே எனதுதொழில் என்பதைப் பிரத்தியக்ஷமாக அறியுங்கள்" என்று தில்லைவாழந்தணராகிய தலைக்குலத்தவர்க்கும் ஏனைய உயர்குலத்தவர்க்கும் அறிவுறுத்தவே ஒரு கடைஞனுக்கு அருள்புரிந்தார் அருட்பெருஞ்சோதியார் எனக்கொள்வதே சிறப்பு.

கனவில் நந்தனாருக்கும் தில்லைவாழந்தணர்க்கும் திருக்கூத்தன் அருள் செய்தார். தில்லைவாழந்தணர் நல்லொழுக்கமும் நற்சார்பும் உடையராய் நந்தனார்காலத் திருந்தமையால் இறைவன் திருவுளக் குறிப்பை நன்றாய் அறிந்து கொண்டனர். உடனே நந்தனாரிடம் சென்றார்கள். இத் "தவ மறையோரெல்லாரும்" ஆங்கு அவரிடம் கூறும் வாக்கின் நுட்பம் நோக்கத்தக்கது. "அடே, நந்தன் பயலே! உன்னைத் தீயிலிட்டுப் பொசுக்கி மந்திர ஸம்ஸ்காரம்செய்து உள்ளே சேர்த்துக் கொள்கிறோம்" என்று அவர்கள் சொல்லவேயில்லை. ஆனால்,

"ஐயரே அம்பலவர் அருளால்இப் பொழுதணைந்தோம்
வெய்யஅழ லமைத்துமக்குத் தரவேண்டி"

என்றார்கள். கல்நாருரித்தன்ன ஈரமிலா நெஞ்சுடைய தில்லைவாழ் ஐயர்கள், ஆராத காதல் ஒப்பரிதாய் வளர்ந்தோங்க உள்ளுருகும் நந்தனாரைத் தங்களுக்கு அன்புப் பாடம் கற்பிக்கும் ஐயரே என்றழைத்ததை நோக்குக. தங்கள் குலச்செருக்காலும் புறப்பூசைச் செருக்காலும் உண்மை யன்பின் உறைவிடத்தை யறியாத அந்தணர்கள் கண்ணுதல் அருளால் காட்டக் கண்டாராதலின் "அம்பலவர் அருளால் இப்பொழுது அணைந்தோம்" என்றார்கள். அன்பிற்கு முன் மந்திர ஸம்ஸ்காரங்கள் நில்லாவென்பதை நன்குணர்ந்த அந்தணர் "அழல் அமைத்து உமக்குத் தர வேண்டி" என்று தாங்கள் சொல்லியபடி செய்யும் ஏவலாளர்களென்பதையும் விளக்கினார்கள்.

தீ வளர்க்கப்பட்டது. நந்தனார் இறைவனை நினைந்து தீயை வலம் வந்தார். "கைதொழுது நடமாடுங் கழலுன்னி 'அழல் புக்கார்'" புண்ணியமா முனி வடிவாய் நூல் விளங்க எழுந்தார். நந்தனாருக்கு நாக்கை மூக்கைமட்டும் சுடும் ஸமஸ்காரம் நிகழவில்லை. உடல் முழுமையும் தீக்குளிக்கும் அரிய ஸமஸ்காரம் நிகழ்ந்தது. ஓரந்தணன் மற்றொரு சிறுவனுக்கு நூலணிவிக்கும் உபநயனம் நடைபெறவில்லை. இறைவனே தீயில் உருமாற்றி நூலணிவித்தான்.



தில்லை வாழந்தணர்க்கும் ஏனைய குலங்கட்கும் முதலென்று புராணாதிகள் விதந்தோதும் பிரமன்போல் நந்த மகாமுனிவர் விளங்கினார்.

"செந்தீமேல் எழும்போது செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போல் தோன்றினார்"

என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு. எனவே கடைஞனொருவன் இறைவன் திருவடியன்பினால் குலங்களைத் தோற்றுவித்த பிரம வடிவம் திகழ விளங்கினமை பெற்றாம். இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற அமரர் பூமாரி பொழிந்தனர். தேவதுந்துபி முழங்கியது. "திருவுடைய தில்லை வாழந்தணர்கள் கைதொழுதார்."

இனி நந்தனார் அம்பலக்கூத்தனை யணுகி அடிப்பேறெய்தியதை ஆராய்வோம். திருநாளைப் போவாராம் "மறைமுனிவர்" "தில்லை வாழந்தணரும் உடன் செல்லச் சென்றெய்தி உள் புகுந்தார்." ஈண்டு உம்மை இழிவு சிறப்பின்கண் வந்ததை நோக்குக. (திருத்தொண்டத் தொகையில் முதலில் வைத்து ஓதப்படும் தில்லைவாழந்தணரை வேண்டுமென்றே குறைகூறுவதாக ஒருவரும் எண்ணுதல் கூடாது.) "உள் புகுந்தார் உலகுய்ய நடமாடும், எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களும் கண்டிலரால்". இவ்வாறு அனைவரும் கண்கொட்டாது விழிப்ப, அவரெதிர் மறைதல் நந்தனாரும் மாணிக்கவாசகரும் செய்த அருந்தொழிலே. ஐந்து பூதங்களாலாகிய பருவுடலை இறைவன் திருவருள் அவ்வப் பூதங்களோடு இமைப்பொழுதில் சேர்ப்பித்தது; ஆன்மா திருவடியில் நின்றது. இதுவே மிகச் சிறந்த விதேக முத்தியாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த விவரங்களடங்கிய வரலாற்றினைச் சேக்கிழார் பெருமான் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியருளினார். அவர் பாடிய பாடல்கள் முப்பத்தேழனுள் ஓரெழுத்தையேனும் இடைச்செருகலென்றாவது நல்ல கொள்கைகட்கு மாறுபட்டதென்றாவது கொள்ள வேண்டிய அவசியமே யில்லை. மேற்கூறியவைகளிலிருந்து சிவபெருமானாவது சேக்கிழார் பெருமானாவது சாதிவேற்றுமை உயர்வு தாழ்வுகள் நமது நாட்டில் வேண்டுமென்று எண்ணுவதாகக் கொள்வதற்கிடமில்லை. சாதி மெய்யன்பின் முன் நில்லாதென்பதையே இச்சரிதை வலியுறுத்தும். இவ்வொரு உண்மையை வலியுறுத்தவே இக்கட்டுரை எழுந்தது. இதை விட்டு விட்டு நந்தனார் கோயிலுக்குள்ளே செல்லும் உரிமை பாராட்டாததினால் இப்போதைய ஆதிதிராவிடர்களும் அவ்வாறு செய்தல் கூடாது, நந்தனார் தீப்புகுந்த பிறகே உட்சென்றதினால் அவர்களும் அவ்வாறே செய்யவேண்டும், கடவுளே தீக்குளி என்று கட்டளையிட்டதால் சைவ சமயத்துக்கு சாதி இன்றியமையாத அடிப்படை என்பன போன்ற பலவகையான விபரீதப் பொருள்கள் காண்பதற்கு இக்கட்டுரையில் இடமில்லையென்பதையும், இவ்வரலாற்றைக் கிழித்துச் சின்னபின்னமாக்கி மனம் போனவாறெல்லாம் குறைகூறுதல் தவறென்பதையும் போலி ஆராய்ச்சிப் புலிகளின் கூரிய நகங்கட்குத் தெரிவிக்கின்றாம்.

"செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்"

# ஒளி

[P. பொன்னரங்க முதலியார், B. A.]

'செந்தமிழ்ச் செல்வி' யென்னும் அழகிய பத்திரிகையின் சமீபத்திய மாத இதழ் ஒன்றில் "முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்" என்னும் தொடக்கத்துப் பாட்டுக்கு அரிய உரை எழுதியவர், அந்த வாகீசப் பெருந்தகையின் இன்னொரு பாட்டாகிய "வெள்ளத்தைச் சடையில் வைத்த.......உள்ளத்துளொளியுமாகும் ஒற்றியூருடைய கோவே" என்னும் பாட்டை மேற்கோளாகக் காட்டி ஒளி என்பதற்குப் புகழ், அறிவு,தெளிவு என்று பொருள் கொடுத்திருப்பதை நேயர்கள் அறிவார்கள். அப்படி பொருள் கொள்வது சரியா என்பதை நாம் இங்கு ஆராய்வாம்.

'ஒளி வளர் தில்லை' என்று "தெளிவளர்வான் சிலை.......என்ற தொடக்கத்துத் திருக்கோவையார் பாவில் வரும் சொற்றொடருக்குப் பேராசிரியர் 'ஒளி வளரா நின்ற தில்லை' என்றே பொருள் கூறிவிட்டு விட்டனர். பின்னர் "ஈசர்க்கு யான் வைத்த அன்பு" என்னும் தொடக்கத்துப்பாட்டில் வரும் 'தில்லையின் ஒளி போன்றும்' என்பதற்கும் 'தில்லையின் ஒளியை ஒத்து' என்றே கூறியிருக்கிறார். தில்லை யென்பது அண்டத்துக்கு இதயம் என்பதை, "திருவளர் ஆரூர் மூலம்.......மன்று இதயம்" என்ற திருவிளையாடற் புராணச் செய்யுளால் அறிகிறோம். அதுபோலவே முருகன் ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமி மலையை "அநாகத க்ஷேத்திரம்" அதாவது இதயம் குறிக்கும் தலமாக எடுக்கிறார்கள். அப்பதியைப்பற்றி அருணகிரியார் 'ஒளிவளர் திருவேரகமே' என்று 'தெருவினில் நடவா மடவார்' என்னும் திருப்புகழில் குறிக்கிறார். ஆகவே ஒளி யென்பதற்கு சோதி யென்று பொருள் கொள்வது ஏற்புடைத்து என்று தோன்றுகிறது. 'அருள் ஒளி' என்றும், 'அருள் சோதி' என்றும் இராமலிங்க சுவாமிகள் அடிக்கடி சொல்லுகிறார். திருமந்திரத்தில் 'அருள் ஒளி' என்றே ஒன்பது செய்யுள்கள் அடங்கிய அத்தியாயம் இருக்கிறது. மாணிக்கவாசகரும் "ஜோதியாய்த் தோன்றும் உருவமே" என்று கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. "உய்ய என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்ய" என்று அவரே, அருளிச்செய்திருப்பது அந்த சோதி ஓங்கார ரூபமாய் நம் உள்ளத்தில் திகழ்கிறது என்பதைக் காட்டுகிறது. "ஆங்காரமு மடங்கார்" என்னும் தொடக்கத்துக் கந்தரலங்காரப் பாட்டில் "ஓங்காரத் துள்ளொளிக்குள்ளே முருகன் உருவங்கண்டு" என்று சொல்லியிருப்பது இந்தப் பொருட்கு அரண் செய்கிறது. திருப்புகழிலும் "வாதினையடர்ந்த" என்னும் பாட்டில் "சோதி யுணர்கின்ற வாழ்வு சிவம்" என்று கூறியிருப்பது சிவோகம் பாவனையில் சோதியையுணர்வதே நமது வாழ்வின் நோக்கம் என்பதைக் காட்டுகிறது. அப்படி சோதியுணரும்போது ஆனந்தம் தோன்றுகிற



தென்பதை "ஆனந்தமாக்குமென் சோதி" என்று "பார்பதம்" என்னும் தொடக்கத்துத் திருவாசகப் பாவினில் கூறியிருப்பதால் அறியலாம். 'புளிக் கண்டார்" என்று ஆரம்பிக்கும் திருமந்திரத்திலும் "ஒளிக்குள் ஆனந்தத் தமுதூறும் உள்ளத்தே" என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும், ஞானக் கோவையில் ஒரு பாகமாகிய நெஞ்சறி விளக்கத்தில், "வெளியில் ஒளியைப் பார் நெஞ்சே" என்று சொல்லியிருப்பதும், இன்னொரு சித்தர் (சிவவாக்கியர்) "ஒளியதான காசிமீதுவந்து தங்குவோர்க்கெல்லாம்,வெளியதான சோதி மேனி விசுவநாதன் ஆனவன்" என்று உரைத்திருப்பதும் ஈண்டு குறிக்கத் தக்கது. பிறகு திருவாசகத்திலும் "புன்புலால் யாக்கை" என்ற தொடக்கத்துச் செய்யுளில் "துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந் தொடக்கெலா மறுத்த நற்சோதி" என்று அதை நன்மை பயக்கும் சோதி என்று காட்டி யிருப்பது கவனிக்கற்பாலது. இந்த சோதி தரிசனம்தான் பரை தரிசனம் என்றும், அதைப் பாராது பார்த்துப் பழகியவர்கள்தான் சிவமாகிய இன்ப நிலையை அடையக் கூடியவர்கள் என்றும், இந்த சோதிதான் விருந்து என்றும், அதன் பிறகு ஏற்படும் சிலம்பொலி (அல்லது நாதம்) சிவம் என்றும் யோக நூல்கள் அடிக்கடி முழங்குகின்றன. வள்ளலார் "யோகத்தி லுள்ளொளி யாயே நின்றான்" என்றும், மணிவாசகர் "இன்னருளால் ஒளிவந் தென்னுள்ளத்தி னுள்ளே ஒளிதிகழ, கிளிவந்த மென்மொழியாள்" என்றும் அருளியிருப்பதைக் காண்க. அதே மாதிரி பாம்பன் சுவாமிகளும் பரிபூரணானந்த போதத்தில் (110-ம் பக்கம்) "திரோதான சத்தி(ஆதி சத்தி)யானது அருளை நாடார்க்கு இருளாகவும், அருளைப் பெற்றவர்க்கு ஒளியாகவும் நிற்கும்" என்று காட்டுகிறார். "வாழ்த்த வல்லார்மனத் துள்ளுறு சோதி" என்று திருமந்திரத்தில் கூறியிருப்பதும், "ஏத்தாதார் அகத்திருளா ஞானை" என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கும் மேலே சொல்லி யிருப்பதை வற்புறுத்தும்.

ஆகவே பெரியார் கருத்துக்களை அறிய முயல்பவர்கள், அவருடைய வாக்குகளினின்றும், அவர்போன்ற பெரியோர் *வாக்குகளினின்றும் உண்மையை ஆராய்ந்து கடைப்பிடித் துய்வார்களாக.

---

* An extract from "Browning Studies" by Edward Berdoe is herewith appended for the benefit of those who may take delight in comparing Western ideas with our own.

**Paracelsus**

"Truth is within ourselves.........A baffling and perverting carnel mesh blinds it and makes all error, and *to know* rather consists in opening out a way whence the *imprisoned splendour* (உள்ளொளி) may escape than in effecting entry for a light supposed to be without."

Compare also Wordsworth's Ode on the Intimations of Immortality.

"Trailing clouds of glory (உள்ளொளி) do we come from God who is our home"

# சமாதான உரை

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B. A.]

திருவாளர் பி. பொன்னரங்க முதலியார் அவர்கள், B. A. ஒளி என்ற தலைப்பின்கீழ், நான் செந்தமிழ்ச்செல்வி சிலம்பு ௧௦, பரல் ௫-ல் 'முன்னமவனுடைய நாமம்' என்ற முதற் குறிப்புடைய தேவாரப்பாட்டுக்கு எழுதிய உரையில் ஒரு பகுதிக்கு மறுப்புரையாக எழுதிய கட்டுரையில் நான் 'ஒளி' என்ற சொல்லுக்குச் 'சோதி' என்று பொருள் கொள்ளவில்லை என்று கூறுகிறார்கள். நான் அவ்வாறு கூறவில்லை. ஒளி, தமிழ்ச்சொல்; சோதி வடமொழிச் சொல். இரண்டு சொற்களும் ஒரு பொருளன. அவர்கள், அக்கட்டுரையில் இரண்டாவது பாதியில் 'ஒளிவளர்தில்லை' என்ற சொற்றொடர் முதல் இறுதியில் "வற்புறுத்தும்" என்ற சொல்வரை பெரியோர்கள் கூற்றுக்களாக அவர்கள் கூறும் மேற்கோள்களின் கருத்துக்கள் எனக்கும் உடன்பாடுதான். அக்கருத்துக்களுக்கு நான் உரையிற் கூறியவை சிறிதும் முரணுடையவையல்ல.

2. அவர்கள் முதலாவது பந்தியில் நான் 'ஒளி' என்ற சொல்லுக்கு, புகழ், அறிவு, தெளிவு என்று பொருள் கொள்ளுதற்கு "வெள்ளத்தை - உள்ளத்து ளொளியுமாகும்" என்ற திருநாவுக்கரசர் தேவாரப் பாட்டை - மேற்கோளாகக் கூறினதாகக் கூறுகின்றார்கள். 'ஒளி' என்ற சொல்லுக்குப் புகழ் என்று பொருள் கொள்ளுதற்கு அப்பாட்டு பொருத்தமுடையதன்று. நான் அதனை மேற்கோளாகக் கூறவுமில்லை. ஒருவர்தம் உள்ளத்தில் தெளிவு அறிவை உண்டாக்கும் (அருள்) ஒளியைக் காணுதலுக்கு மேற்கோளாகக் "கள்ளத்தைக் கழிய மனமொன்றிநின் - றுள்ளத்தி லொளியைக் கண்டதென்னுள்ளமே" என்ற தேவாரப்பாட்டைக் கூறினேன். ஒளிக்குப் புகழ் என்ற பொருளும் உண்டு என்று கூறி அதற்கு மேற்கோளாக 870-வது திருக்குறட் பாட்டில் ஒளி என்பதற்குப் பரிமேலழகர் புகழ் என்று உரை கூறியிருத்தலைக் காட்டினேன்.

3. பரிமேலழகர் திருக்குறள் 970-556 பாட்டுக்களிலுள்ள ஒளி என்ற சொல்லுக்கும் 'புகழ்' என்றே உரை கூறி யிருக்கின்றனர். இன்னும் சீவக சிந்தாமணி-நாமகளிலம்பகம், 248-வது பாட்டில் வருகின்ற "மன்னன் ஒளி" என்பதற்கு மன்னனுடைய புகழ் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. விரிப்பின் உரை பெருகும்.

4. "முன்னமவனுடைய" என்ற தேவாரப் பாட்டுக்கு அறநெறிக்குட்பட்ட சிற்றின்ப நிலையிலும் அறமும் மறமுங் கடந்த பேரின்ப நிலையிலும் வைத்து நான் உரை கூறவேண்டியவன் ஆதலின் ஒளி என்ற சொல்லுக்குப் பேரின்ப நிலையில் இன்ன பொருள், சிற்றின்ப நிலையில் இன்ன பொருள் என விதந்துகூறக்கடமைப்பட்டுள்ளேன். இறைவனினின்றும் வேறாகாத அருட் சத்தி ஒன்றுதானே ஆன்மாக்கள் பக்குவமடைதற் பொருட்டு அவைகள் உலக போகங்களைத் தேடவும் நுகரவும் செய்ய மலத்தோடு கூடிய திரோதான சத்தியாகவும் பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு மலத்தோடு கூடாத



பேரருளாகவும் விளங்குகின்றது. முன்னையது சிற்றின்பத்துக்குரிய உலக வாழ்வு நிலை; பின்னையது பேரின்பத்துக்குரிய வீட்டின்ப வாழ்வு நிலை. ஆகவே அருட்சத்தியினது பேரொளி கோடி ஞாயிற்றொளி ஒன்று கூடினும் சிறிதும் ஈடாகாத ஒரே நிலையினதாயினும் ஆன்மாக்களுடைய பக்குவம் நோக்கி அவ்வொளி அவைகளுக்கு வேறுபடுகின்றது. சிற்றின்பத்துக்குரிய மக்களது உலக வாழ்வு நிலையில் மக்களுக்கு அவர்களுடைய தத்துவக் கருவி வழியாய் அவ்வருளொளி ஏகதேசப்பட்டு விளங்கி உலக அறிவைக் கொடுக்கின்றது. உலக அறிவு நன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறிவு. இந்த உலக அறிவும் அதனை உடைய மக்களது பக்குவத்துக்குத் தகுந்தவாறு பலவகைப் பட்டிருத்தலை நாம் உலக அநுபவத்திற் காணலாம். பகுத்தறிவில் மயங்காது உறுதிப்பட்டுத் தீமையை விலக்கி நன்மையை உணரும் அறிவுடை மக்கள் உலக நலத்துக்கு இணங்கிய ஒப்புரவுச் செயல்களைச் செய்கிறார்கள். அச்செயல்களினது பயனை அறியும் மக்கள் அச்செயல்களைச் செய்தவர்களை நன்கு மதித்துப் பேசுகிறார்கள்! இந்த நன்மதிப்புப் பேச்சுக்களே புகழ் எனக் கூறப்படுவது. இப்புகழானது இல்வாழ்வார்களால் இம்மையில் அடையும் நற்பயன் ஆகும். இதனையே பண்டைத் தமிழ்ப்புலவர்கள் 'இவ்வுலகில் பூத உடம்பு போலப் பொன்றாது நிற்கும் புகழுடம்பு' எனக் கூறினர். ஆகவே புகழுக்குக் காரணம் நற்செயல்களும் அந்நற் செயல்களுக்குக் காரணம் அவைகளைச் செய்கிற மக்களிடத்தில் விளங்குகிற ஏகதேசப்பட்ட அருளொளி விளக்கமும் ஆதலின் திருவள்ளுவர் முதலிய பண்டைத்தமிழ்ப் புலவர்கள் இறைவனது அருளைக் குறிக்கும் ஒளி என்ற சொல்லைப் புகழ் என்ற பொருளிலும் வழங்கி வந்தார்கள்.

5. உயிர் அறிவுடன் இறைவனது அருள் ஒளி மேலே கூறியபடி சிறுகவாயினும் பெருக ஆயினும் கலந்தால் அல்லாமல் உயிர்களுக்கு அறிவு விளங்காது. ஆதலின் ஒளி என்பது சிற்றறிவுக்கும் தெளிவுஅறிவுக்கும் மேலான நிட்டை அறிவுக்கும் பெயர்களாக வழங்கப்பட்டு வந்தது. அதுவன்றி அவ்வொளிக்கு முதலாயுள்ள இறைவனையும் குறிக்க அது வழங்கப்பட்டு வந்தது.

6. (ஜ்யோதி) சோதி என்ற வடமொழிச் சொல்லும் பேரொளிக்கு (Light) மாத்திர மன்றி முழுமுதற் கடவுளுக்கும் பிரமவிட்டுணுக்களுக்கும் ஞாயிறு திங்கள் விண்மீன் முதலிய ஒளிப் பொருள்களுக்கும் அறிவுக்கும் பெயர்களாய் வழங்கப்படுகின்றன. (See Apte's Sanskrit English Dictionary.)

7. ஒளி என்ற சொல் பேரின்ப நிலையில் அருட் பேரொளியைக் குறிக்கிறது. அதனைப்பற்றித் திருவாளர் பி. பொன்னரங்க முதலியார் அவர்களுக்குச் சங்கையில்லை ஆதலின் நான் அதனைப்பற்றி எழுத அவசியம் இல்லை.

# திருவாசகத்தில் ஒரு மணிவாசகம்

[அ. வரதநஞ்சையபிள்ளை]

*வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்டமுழுதுந் தருவோய்நீ*
*வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டிஎன்னைப் பணிகொண்டாய்*
*வேண்டிநீயா தருள்செய்தாய் யானும்அதுவே வேண்டின் அல்லால்*
*வேண்டும்பரி சொன்றுண்டென்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே.*

—**குழைத்தபத்து ௬.**

இதன் பொழிப்பு:—இறைவனே! நீர் முற்றறிவுடையீர். ஆகலின் என்னைய உயிர்த்தொகுதிகட்கு இன்னின்ன காலங்களில் வேண்டத் தக்கவை இவையிவையென நன்கறிபவராகின்றீர். அங்ஙனம் அறிந்து அவற்றை முன்னதாகவே அமைத்துவைத்துக் காத்திருந்து, அவ்வக்காலத்து ஆன்மாக்கள் அவைகளை வேண்டுந் தறுவாயில் பேரருளுடைய பெருமானீராதலின் மாறாது வழங்கியருள்கின்றீர். ஆயினும், தற்போத முனைப்புடன் உம்மை அடைய விரும்பி முயன்ற பிரமவிட்டுணுக்களுக்குக் காண்டற்கும் அரியராயினீர். இத்தகைய ஒப்புயர்வில்லாத நீரே, கல்லாத நெஞ்சிற் கடைப்பட்ட நாயேனையும், (யான் நும்மை யாதும் வேண்டிக் கனிந்த அன்புடன் இரவாமலிருப்பவும்) வலிந்து அறை கூவியழைத்து ஆட்கொண்டு நும் திருவடித்தொண்டு புரிந்து பேரின்பப் பெருவாழ்வினை யடைந்துய்யும் பெறலரும் பேற்றை வழங்குவீரு மாயினீர்! (தாம் வளர்த்ததோர் நச்சுமாமரமாயினும் வைத்து வளர்த்த அருமை கருதி அதனைத் தடியாது போற்றுவார்போல் ஏழையேனையும் பேணும் பொறுப்பு நும்பாலுள்ளதெனத் தெள்ளத்தெளிய அறிகின்றேன் ஆகலின்) நீர் எனக்கு யாதொன்று வேண்டுமென்பதனை அறிந்து வழங்க அருள் கூர்வீரோ அஃதெதுவாயினும் மகிழ்ச்சியுடன் இருகையாலும் ஏற்றுப் பெற்றுக் கொள்ளக் கழிபேராவலுடையேனாகின்றேன். அதுவேயுமன்றி, என் உள்ளத்தே யாதொரு பொருள் வேண்டுமென்னும் அவா உதிக்குமேல் அஃது, நின் சேவடிக்கண் மேன் மேலும் அன்பு பெருக வேண்டுமென்பதாக இருக்குமல்லது பிறிதாயிராது என்பதாம்.

'வேண்டும் பரிசு....விருப்பன்றே' என்பதற்கு (யான் விரும்பும் விருப்பமும் நுமது திருவுள்ளத்தில் முன்னர்த் தோன்றி என் மனத்திற்கு நும்மால் உந்தப்பட்டதாகவே யிருக்கும்) எனக் கூறுவாருமுளர்.

விளக்கக் குறிப்பு:—உயிர்கள் இருண் மலத்தான் முற்றுங் கவரப்பட்டு அறிவற்ற குருட்டு மகவுகள் போன்றிருந்த கேவலாவத்தையில், அவை, தம்மை ஒருவாற்றானுணர்ந்து பையப் பையப் படியேறி உய்யும் நெறி கூடுமாறு, இறைவன், தனது பரிக்கிரக சத்தியாகிய மாயையால் தநுகரணபுவன போகங்களை அவற்றிற்குத் தந்து கூட்டலாலும், அங்ஙனம் உடம்பெய்தி வினைக்கீடாய் போகங்களை நுகர்ந்து வரும் சகலாவத்தையில், மனைவி, பொருள், மக்கள் முதலிய பற்றுக்களில் அழுந்திப் பெருகிய துன்பங்கட்



கிடையே தோன்றும்போலி இன்பத்திற் கேக்கற்று நிற்கும் நிலைக்கிரக்கமுற்று, இளமையாக்கை செல்வமாதியவைகளின் நிலையாமை கண்டு ஊடேஊடே புகுந்து கலக்க மெய்துவிக்கும் துன்பத்தால் வெறுப்புற்று, இனி நிலைபேறுடையதோர் விழுப் பொருளை யடைந்தாலன்றி நீங்காப் பேரின்ப வாழ்வுதலைப் படாதென்றும், இத்தனைக்கும் மூலமாகிய பிறவிப் பெரும்பிணியை அறத்தொலைப்பதற்கு வழி யாதென்றும் கருதி முயலுமாறு அறிவிற்குப்புலப்படுத்துகின்றமையானும், அவ்வாற்றால் சற்குருவைச் சேவித்து மெய்யுணர்வுற உபதேசங் கேட்டுத் தசகாரிய நெறிப்படித் தத்துவதாத்துவிகங்களின் உண்மை தேறிச் சரியை முதலிய நால்வகைச் சோபானங்களினும் ஒழுங்குற நடந்து சென்று பிறவித் தோற்றத்தின் முன்னும் பின்னுமாகிய எஞ்ஞான்றும் தம்மைக் காக்குங் களைகணுவான் ஓர் முழுமுதல்வனுளனெனத் தனது பொருளை நினைந்து நெக்குருகி, அவ்வருளை கண்ணுகத் தன்னை இடையீடறச் சிந்தித்து நின்று தற்போதங் கெட வீடுபெறுமாறு சத்திநிபாதம் நிகழ்வித்துச் சுத்தாவத்தைக்கட் செலுத்தலானும், இங்ஙனம் உயிர்கட்கு அவ்வந்நிலைமையில் வேண்டியவற்றை ஆராய்ந்து அமைக்கும் அவனது பேரறிவை விதப்பார் "வேண்டத்தக்க தறிவோய்" என்றோதினர். தனது முற்றுணர்வானும் முடிவிலாற்றலானும் உயிர்க்குலங்கட்காவனவற்றை அறிந்து அமைக்கும் பெருங்கருணைப் பெருமான், தான் வழங்குவனவற்றைப் பெற்றுய்தற்குரிய உயிர்கள் அவற்றை அவ்வாவுங் காலத்து வழங்கினாலன்றிப் பயன்படாமற் போமெனக் கருதி, மகவுபசிக்குந் தனையும் பொறுத்துப் பாலூட்டச் சுரந்த முலையினளாய்த் தாய் காத்திருக்குமாறு அருகிருந்து தாழ்த்து அவ்வச் சமயத்தில் விருப்பங்களை நிறைவேற்றிவருந்தன்மையைக் குறிப்பார், 'வேண்ட முழுதும் தருவோய்' என்றார்.

இதில் முழுதும் தருதல் என்றது, தன்படைப்பு முற்றும் உயிர்கட்குதவியாதலன்றித் தனக்கெனச் சிறிதுங் கொள்ளாமையைச் சுட்டிற்று. இங்ஙனம் வேண்டுவார் வேண்டியதே யீயும் பேரருளாளனேனும், தற்போதம் முற்றும் ஒழியாத நிலைமையில் தன்னை அறியவேண்டுவோர் எத்தகைய உயர்வினரேனும் அவர் வேண்டுகோளை நிறைவேற்றாதவன் என்பார், 'வேண்டும் அயன் மாற்கரியோய்' என்றார். மாற்றம் மனங்கழிய நின்ற நிலைக்கண் அவனருள் வழித்தாய காட்சிக்குப் புலப்படும் இறைவனை வேற்றுவகை யொன்றானும் அறிந்தடைதலாகாமை இதனால் உணர்த்தப்பட்டது. இத்தகைய அரும்பெருந் தலைவன், ஒன்றுக்கும் பற்றாத பேதையேன் பொருட்டுக் காரணம் யாதுமின்றி அருள் கூர்ந்து, மதுரை மாநகரிற் குதிரை மாறியும், விண்பொறை முடிமிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழின் மேனியில் மாற்றடிபட்டும் என்னை அறை கூவி வலிந்து ஆட்கொண்டருளி, நாயினேனகத்தே குரம்பை கொண்டு இனிய தேனைப் பாய்ச்சி என் எற்புத் தொளைதொறும் அற்புதமான அமுத தாரைகளை யேற்றிப் பேரின்பக்கடலிற் றிளைப்ப ஆழ்த்திய பெருந்தகைமை இருந்தவாறு என்னே! எனத் தம்பால் இறைவன்விளைத்த அருள் நிகழ்ச்சிகளை

எண்ணி எண்ணி வெண்ணெய்ப் பாவைபோ லுடம்பும் உள்ளமுங் கசிந்து கனிந்துருகிக் கண்ணீ ராருகப் பெருக்குவார், "வேண்டி என்னைப் பணிகொண்டாய்" என்றெடுத் துரைத்தார். இங்ஙனம் இருப்பு நெஞ்ச வஞ்சனேனை இன்னிதா யாட்கொண்ட பெருமானீர்! நமக்கு ஏழைத் தொழும்பனேனிடத்துப் பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப் பரிவுண் டெனத் தெளியக் கிடத்தலினாலும், முற்றுணர்வுடைய நமக்கு என் விருப்பம் இதுவென வுணர்த்த வேண்டாமையானும், சிற்றறிவினேன் வேண்டுவது ஓர் கால் இன்பம் போற் காட்டிப் பின் துன்புறுத்துவதாகவும் இருக்குமாதலின் அடியனேற் காவன தேர்ந்தளிக்க நீரே வல்லீராகலா னும், பேரருட் கடலாகிய நீர் யான் வேண்டுமுன்னரே வேண்டியவற்றை வழங்க முற்பட்டுள்ளீராதலானும், இஃது எனக்கு வேண்டும் எனச் சுதந் தரித்துக் கேட்கும் உரிமை எனக்குப் பிறப்பிலேயே இயற்கையில் இன்றாக லானும், ஆண்டான் அடிமைத் திறம் பேணி நிற்கும் தொண்டனேற்குப் பெருமானீர் எவற்றை அருள்கின்றீரோ அவ்வனைத்தும் இன்ப மயமே யாதல் கடைப்பிடித்துள்ளேன் எனத் தமதுள்ளக் கிடக்கையைப் பணி வொடு வெளியிடுவார், 'வேண்டி நீ யாதருள் செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால்' எனக் கூறினர். அற்றாயினும் எனக்கு வேண்டியவற்றை என் வாயாரக் கேட்கத் தேவரீர் விரும்பினும், எனது விருப்பம் முற்றும் முடிந்து இனி யாதும் வேண்டா என்னும் நிலையில் யான் ஒன்றுகூற முற்படி னும், அஃது நும்மிடத்து எனக்குப் பேரன்பு சுரந்து மாறாது பெருகிக் கொண்டிருக்கவேண்டும் என்னும் இவ்வொன்றே யாகுமன்றிப் பிறிதா யிராது. எனத் தமது முடிந்த கருத்தைத் துணிந்து கூறுவார் 'வேண்டும் பொருள் மற்று....விருப்பன்றே' எனவுரைக்கின்றார். இதனுள், இறைவ னது முற்றுணர்வும் முடிவிலாற்றலும் பேரருளுடைமையும், தன் வய (சுதந்தர)மும் ஆன்மாக்களின் சிற்றறிவுடைமையும் முழு அடிமைப்பாடும், அணைந்தோர் தன்மையும் பிறவும் சைவ சித்தாந்தங் கூறுமாறமைந்திருத் தல் காண்க.

## நாவலூரில் நல்விழா

திருநாவலூரில் சுந்தரமூர்த்திசுவாமிகள் திருநக்ஷத்திரத்தை யொட்டி நான்கு நாட்கள் சிறப்பாக விழா நடைபெற்றது. சுவாமிகள் அவதாரம் முதல் கயிலைக்கேகுதல்வரை எல்லா ஐதீகங்களும் பெரிய புராண படனத் தோடு உத்ஸவமாக நடத்தப்பட்டன. திண்டிவனம் சக்ரபாணி பிள்ளை, காஞ்சி பொன்னுசாமி முதலியார், சென்னை சமரபுரி முதலியார், மயிலை பாலசுப்பிரமணிய முதலியார், கிழக்கு மருதூர் நாராயணசாமி நாயடு முத லிய சமாஜத் தொண்டர்கள் சுவாமிகள் சரித்திரப்பகுதிகள் பலவற்றையும் நான்கு நாட்களிலும் சொற்பொழிவுகள் மூலம் விளக்கினார்கள். திருவெண் ணெய் நல்லூர், திருவாமூர், திருத்தூங்கானை மாடம், திருவாமாத்தூர் முத லிய தலங்களிலும் சமாஜத்தினர் வழிபாடாற்றினர்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உமாபதிசிவனார் திரட்டியருளிய அருள்முறைத் திரட்டு உரை

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

(இதழ் ௭, 192-ம் பக்கத் தொடர்ச்சி)

## ௨. உயிரவை நிலை

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
    கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
    வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவேன் அம்மான்
    மறித்தொருகால் பிறப்புண்டேன் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
    செம்பொன் ஏகம்பனே திகைத்திட் டேனே. ௧௯

(உரை) அம்மான் - தந்தையே! திருவாரூர் மணவாளா - திருவாரூரில் உமாதேவி யாருடன் மணக்கோலங் கொண்டிருப்பவனே; திருத்தெங்கூராய் - திருத்தெங்கூரி லிருப்பவனே; செம்பொன் ஏகம்பனே - சிவந்த பொன் னிறமுடையவனும் திரு ஏகம் பத்தில் (காஞ்சிபுரத்தில்) இருப்பவனே; உயிரார் - உயிரானது; கரு - (தாயாரது) கருப் பையில்; குழம்பு ஆகி இருந்து (உம்) - சுக்கிலமும் சுரோணிதமும் கலந்த நெகிழ்ச்சிப் பொருளாகி யிருந்தும்; மூளைகலித்தும் - (பின் அதனிடமிருந்து) மூளை உண்டாகியும்; கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்து ஒன்றாகி (உம்) பின் கருமையான நரம்புகளும் வெண்மையான எலும்புகளும் (இரதம், தோல் செந்நீர், தசை முதலிய தாதுக்களும்) சேர்ந்து திரண்ட பிண்டப் பொருளாகியும்; உருவாகிப் புறப்பட்டு (உம்) - (இவ்வாறு) ஓர் உடல் உருவாகித் தாயாரது கருப்பையிலிருந்து வெளியே உலகிற் பிறந்தும்; இங்கு ஒருத்தி தன்னால் வளர்க்கப்பட்டு (உம்) - இந்த உலகில் அத்தாயாரால் பேணி வளர்க்கப் பட்டும்; கடைபோகார் - வாழ்நாள் எல்லை முடிவு வரையும் உடலில் நிலைத்திராது இடை யிலே இறந்து போகின்றது. (உடலில் உயிர் நிற்கும் நிலை இவ்வளவு நிலையில்லாத தாயிருக்கின்றது) மரு ஆகி - (உடலில் உயிர் நிற்கும் வரை நான்) சிவமணம் கமழப் பெற்றவனாயிருந்து; நின் அடியே மறவேன்-உனது இரண்டு திருவடிகளையே மறவாது நினைந்து கொண்டிருப்பேன். (இது என்னால் செய்யக்கூடியது) மறித்து-(ஆனால் இந்த உடலை விட்டு எனது உயிர் நீங்கினபின்) மறுபடியும், ஒரு கால் பிறப்பு உண்டேல் ஒரு முறை உலகிலே பிறக்க நேரிடுமானால்; மறவா வண்ணம் - நினது திருவடிகளை மறவாமல் இருப்பேனோ என்று; திகைத்திட்டேன் - மயங்குகின்றேன்; ஆதலின் நான் அவ்வாறு பிறந்தால் நினது திருவடிகளை மறவாதிருக்கும்படி அருள் செய்யல் வேண் டும் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்). கருஆகிக் குழம்பிருந்து - என்பது கரு(வில்) குழம்பு ஆகி யிருந்து என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. 'கருவிலுருவாகி வந்து' என அருணகிரி நாதர் திருப்புகழில் கூறியருளினர். குழம்பு - இரண்டு முதலிய பொருள்கள் கலந்து மண்போல வடிவமில்லாமலும் நீர்போல் நெகிழ்ச்சியாயில்லாமலு மிருக்கிற நெகிழ்ச்சிப் பொருள்.

சுக்கிலமும் சுரோணிதமும் கலந்த பொருள் இங்கே குழம்பு எனப்பட்டது. கலித்தல் - என்பது உள்ளே அடங்கி யிருப்பது வெளிப்பட்டுத் தோன்றல்; உண்டாதல். கருநாம்பும் வெள்ளெலும்பும் - இனம் பற்றி பிற தாதுக்களும்கொள்ளப்படும். உயிரார் - கடைபோகார் - ஆர் என்ற பன்மை உருபு இகழ்ச்சிக் குறிப்பாய் உயிருடனும் அது கொண்டு முடிகிற பயனிலை 'கடை போகார்' என்ற வினை முற்றுடனும் சேர்க்கப்பட்டன. "உயிரிஞர் கிடந்தூர் முனி பண்டமே" எனவும் " ஆவியார் " எனவும் அடிகள் வேறிடங்களிலும் இவ்வாறு கூறி அருளினர். கடைபோதல் - கடை நாள்வரையும் நிலை நிற்றல். உயிருள்ள உடல் இன்ன காலம் அழியும் என்ற உறுதி இன்றிக் குழந்தைப்பருவம், இளமைப் பருவம், காளைப்பருவம் முதலியபருவங்களில் ஒன்றில் அழிவதாயிருத்தலின் "கடைபோகார்" என்றார். கடை போகார் ஆல் என்பதில், ஆல் அசை. மரு - மணம். இங்கே சிவ மணத்தைக் குறிக்கிறது. சிவமணங் கமழ்தலாவது - உயிர் தனக்குச் சிவனிடத்துள்ள அத்துவிதத் தொடர்பினால் தன்மை மறந்து அவனை எப்பொழுதும் நினைந்து இன்பம் நுகர்ந்துகொண்டிருத்தல். இந்த நிலையில் திருவருளை மறத்தல் முடியாது ஆதலின் 'மறவேன்' என்றார், நின்னடியே - என்பதிலுள்ள ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. திகைத்திட்டேனே - திகைத்தல் என்பது மயங்குதல் மறுகுதல் திருவடிகளை மறவாதிருத்தல் வேண்டுமே நுண்ணுடலை விட்டுப் பரு உடலுக்கு வந்தபொழுது ஒரு வேளை மறந்து விடுவேனோ என்று மயங்குதல். இந்தக்கருத்தை அடிகள் "துறக்கப்படாத" என்ற முதற்குறிப்புடைய தேவாரப் பாட்டில் "பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன் பேர் - மறப்பன்கொலோ என்றென் னுள்ளங்கிடந்து மறுகிடுமே" என்று கூறி அருளினர்.

> காலிகொடுத் திருகை யேற்றிக் கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
> தோல்படுத் துதிரநீராற் சுவரெடுத் திரண்டு வாசல்
> ஏல்வுடைத் தாவமைத்தங் கேழுசா லேகம் பண்ணி
> மால்கொடுத் தாவிவைத்தார் மாமறைக் காட னாரே. ௧௭

(உரை) மாமறைக்காடனாரே - பெருமை பொருந்திய திருமறைக் காட்டில் திருமேனி கொண்டருளியிருக்கும் சிவபெருமானே; கால் கொடுத்து(உம்) - (கீழே இரண்டு) கால்களை நிறுத்தியும்; இருகை ஏற்றி(உம்) - இரண்டு கைகளை (மேலே இரண்டு தோள்களுடன்) சேர்த்து வைத்தும்; கழி நிரைத்து (உம்) - (எலும்புகளாகிய பல கம்புகளை இரண்டு கால்களுக்கும் இரண்டு கைகளுக்கும் ஊடே எல்லா உடல் உறுப்புகளிலும்) ஒழுங்காய்க் கொழுவி வைத்தும். இறைச்சி மேய்ந்து (உம்) - (எலும்புகளுக்கு ஊடே அவைகள் உரசாதபடி) தசைகளை நிறைத்து வைத்தும்; உதிரநீரால் சுவர் எடுத்து (உம்)- செந்நீராகிய நீருடன் தசைகளைப்பிசைந்து முன் பின் பக்கங்களாகிய) சுவர்களை எழுப்பியும்; தோல்படுத்து (உம்) - (இவைகளை எல்லாம் தோலாற் பொதிந்து மூடியும்; இரண்டு வாசல் ஏல்வு உடைத்தாக வைத்து (உம்) - வாய் குதம் என்ற இரண்டு வாயில்களை அவ்வுடலுக்குப்பொருந்தவைத்தும்; அங்கு - இவ்வாறு அமைத்த அவ்வுடலில்; ஏழு சாலேகம் பண்ணி (உம்)கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, நாசிகள் இரண்டு, மெய்த்துளை ஆகிய ஏழு பலகணிகள் செய்துவைத்தும் (உண்டாக்கப்பட்ட உடலில்); ஆவி - உயிரை; மால் கொடுத்து வைத்தார் - (உடலை நிலையான மெய்ப்பொருள் எனக் கருதும்) மயக்கத்துடன் உலகில் வாழும்படி செய்தார்.

(விளக்கம்) உயிர் உலகில் வாழ்தற்கு இறைவன் உடலை அமைத்தது, உயிரோடு விளங்கும் உடல் இருத்தற்கும் மக்கள் ஒரு வீடு அமைத்தல் போல்வது என்று உருவகப்படுத்தி இத்தேவாரப் பாட்டுக் கூறப்பட்டது. இரண்டு வாசல் - உணவுப் பொருள் உடலினுட் கொள்ளுதற்கு வாயும், அவ்வுணவுப் பொருள் செறித்துச் சாரமாய் உடலுடன் சேர்ந்தபின் எஞ்சி நிற்பது கழிதற்குக் குதமும் ஆகிய இரண்டு வாசல்கள் ஒன்பது வாசல்களினின்றும் பிரித்துக் கூறப்பட்டன. ஏழு சாலேகம் - ஒரு வீட்டினுள்ளே



வெளியே யிருந்து காற்றும் ஒளியும் வருதற்கும் வீட்டிலிருக்கிற காற்று வெளியே போதற்கும் பலகணிகள் அமைந்திருத்தல் போல் வெளியே உள்ள விடய உணர்ச்சிகள் உடலினுள்ளே சென்று உயிரை அடைதற்கும் உயிர், வெளியே உள்ள விடயங்களிற் செல்லுதற்கும் உடலினது ஏழுவாயில்களும் அமைகின்றன. இந்த ஏழுவாயில்களும் வாயும் சேர்ந்து ஐம்பொறிகள் ஆகின்றன. ஏல்வு உடைத்தா - ககர உயிர்மெய் ஈற்றில் தொக்கது. மாமறைக்காடனார் ஆவியை (உடலில்) மால்கொடுத்து வைத்தார் என முடிக்க. கால்கொடுத்தும், இருகை ஏற்றியும், கழி நிறைத்தும், இறைச்சி மேய்ந்தும், தோல்படுத்தும், சுவர் எடுத்தும், இரண்டு வாசல் வைத்தும், ஏழு சாலேகம் பண்ணியும், உண்டாக்கப்பட்ட உடல். இந்த வினையெச்சம் ஒவ்வொன்றிலும் 'உம்' தொக்கி நிற்பது விரித்துப் பொருள் உரைக்கப்பட்டது. கேவல நிலையில் ஆணவ மலத்தினால் அறியாமையில் மூழ்கிக் கிடந்த உயிரைச் சகல நிலையில் உலக வாழ்வில் விட்டுக் கருவி அறிவினால் மயக்கிப் பக்குவப்படுத்தித் தெளிவித்துச் சுத்த நிலையை அடையச் செய்தற்கு உயிருக்கு உடல் உட்கருவி உலகு நுகர்ச்சிகள் (தனுகரண புவன போகங்கள்) இறைவனாற் கூட்டப்பட்டன. ஆதலின் 'மால் கொடுத்து ஆவி வைத்தார்' என அடிகள் கூறியருளினர். இக்கருத்தை அடிகள் 'குறுவித்தவா குற்ற நோய் வினைகாட்டி' என்ற முதற் குறிப்பு உடைய திரு ஐயாற்றுத் திருவிருத்தம் பத்துப் பாட்டுக்களிலும் உரைத்தருளினர்.

> பொக்கமாய் நின்ற பொல்லாப் புழுமிடை முடைகொ ளாக்கை
> தொக்குநின் றைவர் தொண்ணூற் றறுவருந் துயக்க மெய்த
> மிக்குநின் றிவர்கள் செய்யும் வேதனைக் கலந்து போனேன்
> செக்கரே திகழு மேனித் திருக்கொண்டீச் சுரத்து ளானே. ௧௮

(உரை) செக்கர் திகழும்மேனி - சிவந்த வானம் போன்று விளங்கும் நிறமுடையவனாய்; திருக்கொண்டீச் சுரத்துள்ளானே - திருக்கொண்டீச் சுரத்தலத்தில் திருமேனி கொண்டிருப்பவனே; பொக்கமாய் நின்ற பொல்லாப் புழுமிடை முடைகொள் ஆக்கை - நிலையில்லாததும் பொல்லாத புழுக்கள் நிறைந்ததும் புலால் நாற்றம் உடையதுமாகிய உடலின்கண்; ஐவர் தொண்ணூற்று அறுவரும் தொக்கு நின்று - ஐம்புலன்களும் தொண்ணூற்று ஆறு தத்துவங்களும் ஒன்று சேர்ந்துகொண்டு; துயக்கம் எய்த மிக்கு நின்று - நான் சோர்வு அடையும்படி (என்னை அடக்கி) எனக்கு மேற்பட்டு நின்று கொண்டு; இவர்கள் செய்யும் வேதனைக்கு - இந்த ஐந்து புலன்களும் தொண்ணூற்றாறு தத்துவங்களும் எனக்குச் செய்கின்ற துன்பங்களினால். அலந்து போனேன் - நொந்தேன்; வருந்தினேன். இத்துன்பங்களினின்றும் அடியேனைக் காத்தருளல் வேண்டும் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) செக்கரே - என்பதிலுள்ள ஏ - அசை நிலை. செக்கர் என்பது செவ்வானம் - மேனி நிறம். பொக்கமாய் நின்ற - பரு உடல் மாறிமாறி அழிந்து நிலையில்லாததாயிருத்தலால் அது பொய் எனப்பட்டது. நின்ற - எப்பொழுதும் உள்ள இயல்பு பற்றி நிற்கிற என்பது நின்ற என இறந்த காலத்தாற் கூறப்பட்டது. (நன்னூல் பொதுவியல். ௩௩-வது சூத்திரம்) ஐவர் தொண்ணூற்றறுவர் - ஐம்புலன்கள் (பஞ்சேந்திரியங்கள்) தொண்ணூற்றாறு தத்துவங்களில் அடங்குமாயினும் அவைகள் மனதுடன்சேர்ந்து உயிரை உலக போகத்தில் அமிழ்த்தி மயக்கும் சிறப்புத் தொழில் பற்றி வேறாகப் பிரித்தும் கூறப்பட்டன. இத்தத்துவங்கள் உயிரில்லாத அஃறிணைப் பொருள்களாயினும் உயிர் அவைகளைத் தன்னின்றும் வேறாகப் பிரித்து உயிரில் பொருள் என்று அறியாது உயிர்ப் பொருள்கள் போலக் கருதி அவைகளுக்குள் அடங்கி ஒழுகலால் அவைகள் உயர்திணைப் பொருள்களாகக் கூறப்பட்டன. மிக்கு நின்று - மேற்கொண்டு நின்று.

(dominate) வேதனைக்கு - வேதனையினால்; உருபு மயக்கம். இவர்கள் - மேலே கூறிய ஐவர் தொண்ணூற்றறுவர்களைக் குறிக்கின்ற சுட்டுப் பெயர். ஏ - ஈற்றசை.

ஐவகையரை யரவராகியாட்சி கொண்டொரு காலவர் நீங்கார்
அவ்வகையவர் வேண்டுவ தானாலவரவர் வழியொழுகி நான்வந்து
செய்வகை யறியேன் சிவலோகா தீவணா சிவனே யெரியாடீ
எவ்வகை யெனக்குய் வகையருளாயிடை மருதுறை எந்தை பிரானே. ௧௯

(உரை) சிவலோகா - சிவலோகத்திலிருக்கிறவனே; தீவணா - தீப்போல் செக்கிறமுடைய உருவனே; சிவனே - எப்பொழுதும் நன்மையையே செய்கிறவனே; எரி ஆடீ - தீயைக் கையில் வைத்துக்கொண்டு பொதுவில் நடனம் செய்கிறவனே; இடை மருதுஉறை எந்தை பிரானே - திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கின்ற எனது தந்தையே, எனது தலைவனே; ஐவகையர் - ஐந்து ஐந்து இனமாய் அமைந்திருக்கின்ற தத்துவக் கூட்டங்கள்; ஐயர் அவர் ஆகி - எனக்குத் தலைவர்களாகி; ஆட்சிகொண்டு - (என்னைத் தங்கள் வயப்படுத்தி) ஆளுகை செய்து; அவர் ஒரு கால் நீங்கார் - அவர் என்னை விட்டு ஒருபொழுதும் விலகி யிருக்கமாட்டார்; அவர் - அந்த ஐந்து இனங்களாயுள்ள தத்துவக் கூட்டங்கள்; அவ்வகை வேண்டுவதானால் - என்னை அவ்வாறு வயப்படுத்தி ஆள விரும்புவார்களானால்; நான் அவர் அவர் வழி ஒழுகி வந்து - நான் அவரவர் ஏவினபடி நடந்து உலக போகம் நுகர்ந்து கொண்டு (உன்னை நினையாமலிருப்பேனாகில்) செய்வகை அறியேன் - அவைகளுடைய ஆட்சியினின்றும் தப்பி உய்வதற்கு என்ன செய்யவேண்டும் என்பது அறியமாட்டேன்; உய்வகை எவ்வகை அருளாய் - (ஆதலின்) நான் எவ்வழியில் உய்யலாமோ அந்த வழியை எனக்குத் தெரிவிப்பாயாக.

(விளக்கம்) ஐவகையர் - ஐந்து ஐந்து இனமாயுள்ள (Sets of five) தத்துவக் கூட்டங்கள். அவ்வினங்களாவன: தூல தன்மாத்திரை (ஐம்பூதங்கள்) ஐந்து, சூக்குமதன்மாத்திரை ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக் கரணங்கள் நான்கும் மூலப்பகுதியும் சேர்ந்து ஐந்து, காலம் நியதி கலை வித்தை அராகம் ஐந்து, சுத்த வித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் ஐந்து. ஐவர்; என்று சொல்லாது ஐவகையர் என்று சொன்னதனால் ஐம்புலன்கள் என்று பொருள் கொள்வதற்கு இல்லை. திருவள்ளுவர் "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகை" என்று கூறியதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையை நோக்குக. ஐயர் அவர் - ஐயர் = தலைவர்; அரசர். அவர் - பகுதிப் பொருள் விகுதி. தீவணா - தீவண்ணா. என்றது தீவணா எனக்குறுகியது - குறுக்கல் விகாரம். வண்ணன் என்னும் ணகார ஈற்று உயர்திணைப் பெயர் ஈறு கெட்டு ஈற்றயல் ணகாரம் நீண்டு விளிப் பெயர் ஆயிற்று. வண்ணம் = நிறம். எரி ஆடீ - ஆடி என்பதிலுள்ள டகர இகரம் நீண்டு விளிப் பெயர் ஆயிற்று. எந்தை பிரானே - எனக்குத் தந்தையும் தலைவனுமா யிருப்பதால் என்னைக் காத்தல் உன் கடன் என்பது குறிக்கப்பட்டது. பிரானே என்பதிலுள்ள ஏ-விளியுருபு. சிவன்-என்ற சொல்லுக்குப் பேராசிரியர் "எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன்" என 358-வது திருக்கோவையார் பாட்டில் உரை கூறியிருத்தல் காண்க.

வரைகிலேன் புலன்களைந்தும் வரைகிலாப் பிறவி மாயப்
புரையிலே அடங்கி நின்று புறப்படும் வழியுங் காணேன்
அரையிலே மிளிரு நாகத் தண்ணலே அஞ்ச லென்னாய்
திரையுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து ளானே. ௨௰

(உரை) அரையிலே மிளிரும் நாகத்து அண்ணலே - அரையிலே ஒளி செய்கின்ற பாம்புகளை அணியாக அணிந்த தலைவனே; திரை உலாம் பழன வேலி - நீர் பெருகி அலை வீசுகின்ற வயல்களை வேலியாகவுடைய; திருக்கொண்டீச் சரத்துளானே - திருக்கொண்டீச்சரப்பதியில் எழுந்தருளி யிருக்கின்றவனே; புலன்கள் ஐந்தும் வரைகிலேன் - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலன்களையும் அடக்கி ஆளமுடியாமலிருக்கிறேன்; வரைகிலாப்பிறவி - இத்தனை என்று அளவுபடுத்த முடியாது நான் எடுத்த பிறவிகளில்; மாயப்புரையிலே அடங்கி நின்று - நிலையில்லாத உடலிலே (ஐம்புலன்களையும் என்வயப்படுத்தி உனக்குள்ளே) அடங்கி நின்று; புறப்படும் வழியும் காணேன் - உடலோடுகூடிய பிறவியை விட்டு நீங்கி (உன்னை அடையும்) வழியையும் நான் அறியமாட்டேன்; அஞ்சல் என்னாய் - (இவ்வாறு தயங்கிக் கொண்டிருக்கிற என்னை) அஞ்சாதே என்று சொல்லிக் காத்தருள்வாய்.



(விளக்கம்) வரைகிலேன் - வரை = அளவு. வரைதல் - அளவு படுத்தல், அடக்கல், கில் என்பது ஆற்றல் உணர்த்தும் இடை நிலை. ஏன் - தன்மை ஒருமை விகுதி. மாயப்புரை - மாயம் = பொய் - அதாவது நிலையில்லாதது - புரை = குடில் அது இங்கே குடில் போன்ற உடலைக் குறிக்கிறது. மாயப்புரையிலே அடங்கி நின்று புறப்படும் வழி என்பது உயிரானது மனம் ஐம்புலன்களை விடயங்களிற் செல்லவொட்டாது அடக்கி உலகப்பற்றைவிட்டு இறைவனுடைய திருவடிகளிலே நிறுத்தி நினைந்து கொண்டிருந்து அவ்வாறு நினைத்ததன் பயனாகப் பிறவி நீங்கும் வழி. மிளிரும் நாகம் - பாம்பு ஒளியோடு விளங்குகிற குண்டலி சத்தியாகிய சுத்தமாயையைக் குறித்தலால் 'மிளிரும்' என்றார். என்னாய் - என்று சொல்லாய். ஆய் என்பது முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி.

கழித்திலேன் காம வெந்நோய் காதன்மை யென்னும் பாசம்
ஒழித்திலே னூன்க ணோக்கி யுணர்வெனு மிமைதிறந்து
விழித்திலேன் வெளிறு தோன்ற வினையெனுஞ் சரக்குக் கொண்டேன்
அழித்திலேன் அயர்த்துப் போனே னதிகைவீ ரட்ட னீரே. ௨௧

(உரை) அதிகை வீரட்டனீரே - திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளி யிருக்கிறவரே; காமவெந்நோய் கழித்திலேன் - விருப்பம் என்னும் கொடிய நோயை நீக்கமாட்டேன்; காதன்மை என்னும் பாசம் ஒழித்திலேன் - அந்த விருப்பத்துக்குக் காரணமாயுள்ள மயக்கத்தை (அவிச்சை) போக்கமாட்டேன்; ஊன்கண் நோக்கி - உடலினுள்ளே இறைவனை எனது அறிவின் கண்ணை ஆராய்ந்து அறிந்து; உணர்வு எனும் இமை திறந்து விழித்திலேன் - மெய்யுணர்வு என்று கூறப்படும் அகக்கண்ணைத் திறந்து பார்க்கமாட்டேன்; வெளிறு தோன்ற - ஏனெனில் அவ்வாறு அகக்கண் பார்வையின்மையால் (எனது அறிவின்மை வெளிப்பட) அதுகாரணமாக வினையெனும் சரக்குகொண்டேன் - நல்வினை தீவினை என்று சொல்லப்படும் பொருள்களை (எனது நெஞ்சத்துப் பாரமாகக்) கொண்டேன்; அழித்திலேன் - நல்வினை தீவினைப் பொருள்களை அகக்கண் பார்வையால் எனது நெஞ்சத்தில் இல்லாதிருக்கும்படி கெடுக்கவில்லை; அயர்த்துப்போனேன் - (நல்வினை தீவினைகளைக் கெடுத்தல் எனக்கு நலம் என்பதையும் அகக்கண் பார்வை யின்மையால்) நான் மறந்துவிட்டேன். இந்த நிலையில் நீர் எனது அகக்கண்ணைத் திறக்கச்செய்து காத்தருளல் வேண்டும் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) இந்தத் தேவாரப் பாட்டில் உயிர், ஊனக் கண்ணினிற் பாசமுணராப்பதியை ஞானக்கண்ணினிற் சிந்தை நாடிப் பாசம் ஒருவித் தண்ணிழலாம் பதியை நாடச்செய்தல்வேண்டும் என்ற வேண்டுகோளைத் திருநாவுக்கரசு அடிகள் இறைவனிடத்துச் செய்கின்றார். உயிர் இறைவனை அடைதற்குத் தடையாயுள்ளன, உலக போக நுகர்ச்சியில் உன்முகத்திற் கேதுவாகிய பும்ஸ்துவமலம் என்றோதப்படும் பஞ்சக் கிலேசங்கள், அப்பஞ்சக் கிலேசங்கள், 1. அவிச்சை, 2. ஆங்காரம், 3. அவா, 4. ஆசை, 5. வெகுளி என்பன. இப்பஞ்சக் கிலேசங்களும் திருவள்ளுவ நாயனார் கூறுகின்ற காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்றிலும் அடங்கும். இத்தேவாரத்தில் விருப்பம் (காமம்) மயக்கம் (அவிச்சை) என்ற இரண்டு கிலேசங்களும் கூறப்

பட்டன. இனம்பற்றி வெகுளியும் கொள்ளப்படும். இப்பஞ்சக் கிலேசங்கள் நீங்கினாலன்றி இருவினை நீங்குமும் அதுபற்றி அகக்கண் பார்வை என்னும் மெய்யுணர்வும் உண்டாகா. ஆதலின் அவைகள் இப்பாட்டில் முதலாவது கூறப்பட்டன. ஊன்கண் நோக்கி - ஊன் ஆகுபெயராய் உடலைக் குறிக்கின்றது. ஊன் கண் நோக்குதலாவது, வெளியே உலகிற் செல்கின்ற பார்வையைத் தடுத்து யோகத்தால் உடலினுள்ளே இறைவனை நோக்குதலாகும். இது யோகப்பார்வை. உணர்வு எனும் இமை திறந்து விழித்திலேன் - உணர்வு = இறைவனை அவனது அருளினால் உணரும் மெய்யுணர்வு. இது ஞானப் பார்வை. என்னும் என்பது எனும் எனக் குறுகிநின்றது. இமை என்பது இங்கே அகக்கண்ணை (ஞானக்கண்ணைக்) குறிக்கின்றது. இறைவன் அவனது அருளினால் உணரப்படுகிறவன் அன்றி அறியப்படுகிறவனும் ஓதப்படுகிறவனும் அல்லன். இக்கருத்தைக் காரைக்காலம்மையார் தமது அற்புதத் திருவந்தாதியில் "**பிறரறிய லாகாப் பெருமையருந்தாமே - பிறரறியும் பேருணர்வுந்தாமே**" என்று கூறியருளினர். உலகெலா முணர்ந்தோதற் கரியவன் என்பதும் இக்கருத்தையே விளக்குகின்றது. காதன்மை - பாசம். காதல் + மை - ஆசை, விருப்பம். பாசம் = பற்று (Passion) இங்கே பற்றுக்குக் காரணமாகிய அவிச்சை (மயக்கம்) யைக் குறிக்கின்றது. வெளிறு - தோன்ற. வெளிறு = வெண்மை. அது அறியாமையைக் குறிக்கின்றது. திருக்குறள் 503 வது பாட்டில் பரிமேலழகர் உரை பார்க்க. வினை எனும் சரக்குக்கொண்டேன் - வினை என்னும் சரக்குக் கொள்ளுதலாவது உலகத்தில் சில பொருள்கள்மேல் விருப்பும் சில பொருள்கள்மேல் வெறுப்பும் சில உயிர்கள்மேல் நட்பும் சில உயிர்கள்மேல் பகைமையும் நெஞ்சில் நிறைந்து நின்று அவைகள் காரணமாக நல்வினை தீவினைகளைச் செய்தலாகும் வினை தீரினன்றி மெய்ஞ்ஞானம் விளையாது ஆதலின் அடிகள் இவ்வாறு கூறினார். அடிகள் சரக்கறைத் திருவிருத்தத் தேவாரத்தில் தமது நெஞ்சத்தை இறைவனுடைய மழுவாட்படையும் பல பூதமும் புலித்தோலுடையும் தலைமாலையும் பிறையொதுங்கும் சடை முதலியவைகளிருக்கும் **சரக்கு அறை** எனக் கூறியதை நோக்குக.

மாட்டினேன் மனத்தை முன்னே மறுமையை உணரமாட்டேன்
மூட்டிநான் முன்னை நாளே முதல்வனை வணங்க மாட்டேன்
பாட்டினாய் போல நின்று பற்றதாம் பாவந் தன்னை
ஈட்டினேன் களைய மாட்டே னென்செய்வான் றோன்றி னேனே. ௨௨

(உரை) முன்னே - முற்காலத்திலே; மனத்தை மாட்டினேன் - நான் எனது மனதை (உலக நுகர்ச்சிகளிற்) செலுத்தினேன்; மறுமையை உணரமாட்டேன் - அவ்வாறு செலுத்தின காரணத்தால் நான் இப்பொழுது இறப்புக்குப் பின் மறுமையில் வரும் நிரயத் துன்பத்தை மனதில் உணர்ந்து நடக்கமாட்டேன்; முன்னை நாளே நான் முதல்வனை மூட்டி - முற்காலத்திலே நான் எனது மனதை இறைவனிடத்தில் பற்றும்படி செய்து; வணங்கமாட்டேன் - அவனை வழிபடாமற் போய்விட்டேன்; பாடு இல் நாய் போல் நின்று - அதனால் இப்பொழுது, பெருமையில்லாத நாய்போல் நின்று; பற்றதாம் பாவம் தன்னை ஈட்டினேன் - பாவச்செயல்களையே செய்து, அவைகளின் பயனை (எனது புத்தி தத்துவத்தில்) சேர்த்து வைத்துக்கொண்டேன்; களையமாட்டேன் - (அவ்வாறு நான் சேர்த்து வைத்திருக்கிற தீவினைப் பயன்களை வேண்டுவன செய்து) அடியோடு நீக்கவுமாட்டேன்; என் செய்வான் தோன்றினேன் - (பாவஞ்செய்யாமலாவது அல்லது ஒரு காலத்தில் அறியாமையினாற் பாவஞ் செய்தாலும் அதனை நீக்காமலாவது இருக்கிற இந்த உலகவாழ்வில்) நான் என்ன நற்பயனை அடைதற்காகப் பிறந்தேனோ தெரியவில்லை.

(விளக்கம்) மறுமையை உணர மாட்டேன் மறுமை என்பது இறப்புக்குப் பின் வரும் நிரயத்துன்பம். இம்மையில் ஒருவன் எம்மட்டில் வேட்கை வயப்பட்டு உலகபோக



நுகர்வுகளிற் பயில்வானோ அம்மட்டில் அவன் மறுமையில் துன்பம் நுகருதல் நியதி ஆகும். முன்போக நுகர்வுகளிற் பழகின பழக்கம், பின்னே மறுமையில் துன்பம் வரும் என்று அறிந்தாலும் அத்துன்பத்தை தீவினை உணர வொட்டுவதில்லை யாதலின் 'உணர மாட்டேன்' என்றார். முதல்வனை மூட்டி - உருபுமயக்கம் - முதல்வனிடத்தில் மூட்டி என ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தது; மூட்டுதல் = பற்றச் செய்தல்; உலக வழக்கில் தீ மூட்டுதல் என வருகின்றது. வணங்கமாட்டேன் - வணங்கல் - வளைதல். அடிமை, நிலையில் உயிர் தனது அறிவு வேட்கை செயல்களை முதல்வனுடைய அறிவு வேட்கை செயல்களில் அடங்கச் செய்து தன் முனைப்பின்றி நிற்றலே வணங்கலாகும். வழிபடுதலும் அதுவே. இவ்வாறு வணங்குதலே உயிர்தனது வினைப்பயன்களை வேரோடுகளையும் வழியா யிருத்தலின், வணங்காமலிருத்தலினால், பற்றதாம்பாவத்தைக் களையமாட்டேன்' என்று அடிகள் பின்னே கூறியருளினார். பாட்டினாய் - பாடு + இல் + நாய். டகரவொற்று இரட்டியது. பாடு = பெருமை - பாடில் - பெருமையில்லாத அதாவது இழிவான. பற்றதாம்பாவம் ஈட்டினேன் - பற்று + அது + ஆம் + பாவம் அது பகுதிப் பொருள் விகுதி. பற்று = பற்றுதல் - முதனிலைத் தொழிற் பெயர். ஒருவன் பாவத்தைப்பற்றி அதனைச் செய்து பழகினால் பாவம் அவனைப்பற்றிக் கொள்கிறது ஆதலின் 'பற்று ஆம் பாவம்' என்றார். பாவச் செயல் ஒவ்வொன்றும் கழிந்த பின்னும் அதன் பயன் புத்தி தத்துவத்திற் கிடந்து பக்குவப்பட்டுப் பின் அதனைச் செய்தவனுக்குத் துன்பமாய் விளைதலால் 'ஈட்டினேன்' என்றார். ஈட்டுதல் = தொகுத்தல். என்செய்வான் தோன்றினேன் - செய்வான் எதிர்கால வினையெச்சம். வான் - எதிர்கால வினையெச்ச விகுதி. தோன்றுதல் - பிறத்தல். "பிறப்பினாற் பெற்ற பயனாவதெல்லாந் - துறப்பதாந் தூநெறிக்கட்சென்று" என்று ஔவையார் கூறியபடி இறைவனை அடையச் செய்யாத பிறப்பினாற் பயனில்லை என்பதை அடிகள் கூறினார். திருநாவுக்கரசு அடிகள் வரலாற்றினால் இப்பாட்டிற் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றும் காணப்படாமையால் அவர் நம்போன்றவர்களுக்கு அறிவுறுத்த இப்பாட்டைக் கூறினார் என்று நாம் நினைக்கவேண்டியதாயிருக்கிறது.

பழியுடை யாக்கை தன்னிற் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழ மாட்டேன் மாயமுந் தெளிய கில்லேன்
அழிவுடைத் தாய வாழ்க்கை ஐவரா லலைக்கப் பட்டுக்
கழியிடைத் தோணி போன்றேன் கடவூர்வீ ரட்டனீரே. ௨௩

(உரை) கடவூர் வீரட்டனீரே - திருக்கடவூர் வீரட்டம் என்ற தலத்தில் எழுந்தருளியிருக்கின்றவரே; பழியுடை யாக்கை தன்னில் - பழிக்கப்படும் பாவச் செயல்களைச் செய்தற்கு இடமாயிருக்கிற இந்த உடலில்; பாழுக்கே நீர் இறைத்து - உலக வாழ்வைப் பயன்பட வாழாது வீணாகக் கழிப்பதல்லாமல்; வழியிடை வாழமாட்டேன் - பயன்படும் முறைமையில் நான் வாழமாட்டேன்; மாயமும் தெளிய கில்லேன் - இவ்வாறு நான் உயிர் வாழ்தற்குக் காரணமாயிருக்கிற வஞ்சனையையும் நான் தெளிவாய் அறிந்து கொள்ள முடியாமலிருக்கிறேன்; அழிவுடைத்தாய வாழ்க்கை - அடிக்கடி பிறந்தும் இறந்தும் அழிகின்ற உடலிலுள்ள உயிர் வாழ்க்கையானது; ஐவரால் அலைக்கப் பட்டு - ஐம்புலன்களால் ஆட்சி செய்யப்பட்டுத் துன்பம் அடைதலால்; கழியிடைத் தோணி போன்றேன் - உப்பங்கழியிற் செல்கிற தோணி அங்கும் இங்கும் அலைகளால் மோதப்பட்டு நேர்வழியிற் செல்லாதிருத்தல் போல் நானும் ஐம்புலன்களால் ஆட்டுண்டு எனது வாழ்க்கையை நேர் வழியிற் செலுத்த இயலாது வருந்துகின்றேன். ஆதலால் தேவரீர் என்னைக் காத்தருள் செய்தல் வேண்டும் என்பது குறிப்பெச்சம்.

(விளக்கம்) பழி - பழிக்கப்படும் பாவச் செயல்கள். யாக்கை - யாத்தல் - கட்டுத்தல், தசை, நரம்பு முதலிய தாதுக்களால் கட்டப்படுதலின் இவ்வுடல் யாக்கை எனப்பட்டது. யாக்கை தன்னில் - தன் அசை. பாழுக்கே நீர் இறைத்து - என்பது உருவகம்.

பாட்டில் உவமைப் பொருள் விளக்கப்படவில்லை - பாழ் என்பது பாழ்நிலம், உவர் முதலியவற்றால் விளையாத நிலம். பயிர் முளையாத நிலத்துக்கு வீணாக நீர் இறைத்தல்போல உயிர் வாழ்வைப் பயன்பட வாழாது வீணாகக் கழித்து என உவமையும் உவமப் பொருளும் விரியும். இறைத்து, என்ற சொல்லுக்கு அடுத்து 'அன்றி' என்ற சொல் தொக்கி நிற்கிறது. அது சொல்லெச்சம். வழி இடை - வழி = முறைமை. இடை 'ஏழாம் வேற்றுமை உருபு. முறைமையாக. அதாவது பயன்படும்படியாக. கழி - கடலுக்கு அருகிலுள்ள உப்பங்கழி (Backwaters) கழியிடைத் தோணி போன்றேன் என்பதும் உருவகம். இதனுடைய உவமப் பொருள் விளக்கிப் பதவுரை கூறப்பட்டது. ஏ - ஈற்றசை. இந்தப் பாட்டும் நம் போல்வார்க்கு அறிவுறுத்தக் கூறப்பட்டது.

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கலேன் விலங்கலா தொழிந்தே னல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் றோன்றினே னேழை யேனே. ௨௪

(உரை) குலம் பொல்லேன் - நற்குலத்தினிற் பிறவாததனா லாகிய குற்றமுடையேன்; குணம் பொல்லேன் - நற்குணத்தினைப் பொருந்தாததனா லாகிய குற்ற முடையேன்; குறியும் பொல்லேன் - வாழ்க்கையில் நற்குறிக்கோ ளில்லாமையாலாகிய குற்றமும் உடையேன்; குற்றமேபெரிது உடையேன் - இவ்வாறு குலம் குணம் குறிகளால் மிகுதியாகக் குற்றங்களையே உடையேன்; கோலமாய நலம்பொல்லேன் - உடல் உரு அழகு இல்லாமையா லாகிய குற்ற முடையேன்; நான் பொல்லேன் - உயிர்நல மில்லாமையா லாகிய குற்ற முடையேன்; ஞானிஅல்லேன் - உயிர் இறைவனை வழிபட்டு அதனாலுண்டாகும் மெய் அறிவினை உடையே னல்லேன்; நல்லாரோடு இசைந்திலேன் - (அந்த மெய் அறிவு எனக்கு உண்டாகும் வண்ணம்) மெய் அறிவுடைய நல்லாரோடு இணங்கி ஒழுகினேன் அல்லேன்; நடுவே நின்ற விலங்கு அல்லேன் - (மேற்கண்ட குற்றங்கள் உள்ளவனாய் நான் மனிதப்பிறவியிற் பிறத்தலைப் பார்க்கிலும் குற்றங்கள் என்று எண்ணப்படா திருத்தற்கு) மனிதப் பிறவிக்கும் ஏனை நாலறிவு உயிர்களுக்கும் நடுவே உள்ள ஐயறிவு விலங்குப் பிறவியிற் பிறவாமற்போனேன்; விலங்கு அலாது ஒழிந்தேன் அல்லேன் - மனிதப் பிறவியிற் பிறந்தாலும் விலங்குகளுக்கு உரிய பண்புகள் என்னிடத்தில் இல்லாதபடி எனது அறிவினால் விடுத்தவனும் அல்லேன்; வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன் - பிறர் வெறுக்கிற இன்னாச் சொற்களை மிக்குப் பேசும் வன்மையை உடையேன்; இலம்பொல்லேன் - (குற்றங்களுடன் ஒருவன் பிறந்தாலும் அவனுக்குச் செல்வ மிருந்தால் அக்குற்றங்கள் பிறரால் கவனிக்கப்படாதபடி) செல்வம் இல்லாமையாலுண்டாகும் குற்றம் உடையேன்; இரப்பதே ஈயமாட்டேன் - செல்வம் இல்லாமையினால் நான் பிறரிடம் பொருளை இரந்து வாங்குதல் அல்லாமல் அவருக்குக் கொடுக்கமாட்டேன்; ஏழையேன் என்செய்வான் தோன்றினேன் - (இவ்வளவு குற்றங்களையும் குறைவுகளையும் உடைய) ஏழையேனாகிய நான் உலகில் என்ன பயன் அடையும் பொருட்டுப் பிறந்தேனோ தெரியவில்லை.

# தமிழ்ச் சாமவேதம்

[சாமி. வேலாயுதம் பிள்ளை பி. ஏ. எல். டி.]

இராவணன் பாடியதாகக் கருதப்பெறும் தமிழ்ச் சாமவேதம் சியம் (Siam) அரசர் சுவடி நிலையத்தில் பாலி லிபியில் (Pali script) இருப்பதாகவும் அதை வெளிப்படுத்த வேண்டிய முயற்சியைத் தமிழர்கள் எடுத்துக்கொள்ள வேண்டு மென்றும் அண்மையில் நிகழ்ந்த துறையூர் தமிழர் மாநாட்டில் வெளியாயிற்று. இதில் மிகுதியாகப் பற்றுவைக்க வேண்டிய சைவர்கள் இதற்கெனவூக்கம் எடுத்துக் கொள்ளுவார்களா? இவ்விஷயத்தில் மிகவும் பற்றுவைத்துள்ள திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் இதைப்பற்றி நன்கு விசாரித்து இதற்கு இவ்வாறு முயற்சிக்க வேண்டும், இன்னார் உதவிவேண்டும், இவ்வளவு செலவாகும்என்று திட்டம்போட்டு உதவுவார்களா? உதவின் வேண்டிய தொகையை நல்க சைவஉலகம் காத்துக்கொண் டிருக்கிறதென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடுத்த சித்தாந்த இதழில் இதன் விவரம் வெளிவருமென்று எதிர்பார்க்கிறேன். நான் ஐம்பது ரூபாய் தர சித்தமாயிருக்கிறேன்.

---

# பரிசுச் சீட்டுகள்

நம் சமாஜம் நடத்துகிற தேவாரப் பரிசுச் சீட்டு, தலயாத்திரைப் படப் பரிசுச் சீட்டு பெறுவதில் ஒருவர் தமது பெயராலேயே முறையே ஆறு, ஐந்து சீட்டுகட்குமேல் எடுக்கப்படாது என்று இதுவரையி லிருந்த நிபந்தனை விலக் கப்பட்டுள்ளது. எனவே, ஒவ்வொருவரும் அதிகமான சீட்டுக்களை எடுத்து விரைவில் சீட்டு முடிவதற்கான உதவியைப் புரிய வேண்டுகிறோம்.

இங்ஙனம்:

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார்,

காரியதரிசி.

---

D. GOPAUL CHETTY'S UNIQUE PHILOSOPHICAL WORKS

**CHIDAMBARA RAHASYA REVEALED**

Philosophical secrets of worship at Chidambaram are here scientifically explained for the first time. Price Re. 1.

**SAIVAISM, THE RELIGION OF THE ANCIENT BRITONS**

*The "Hindu Organ" says of this :—* "It will thus be seen that Mr. Chetty has done ample justice to the theory he advances." Price As. 8.

**பதி பசு பாச விளக்கம்**

(மொழிபெயர்ப்பு)

தமிழ் வித்துவான் திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் கூறுவது:—"அவ்வுண்மைகளைப் புதிய முறையில் வெளிப்படுத்தும் இந்நூலை வாங்கிப் படித்தலால் நல்ல பயன் எய்தலாகும். இந்நூலைப் படித்தலால் என்னறிவிற்குத் தெளிவுண்டாகிறது. விலை ரூபா 1. (504 பக்கங்கள்.)

பரம இச்சாஞான தீபிகை:— (மொழிபெயர்ப்பு) விலை அணா 8.

*Apply to :—*

**D. GOPAUL CHETTY,**
Royapettah, Madras.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 5—No. 9.

சைவ சித்தாந்த மகாசமாஜத்தில் விற்பனைக்குரிய

# புத்தகங்களின் அட்டவணை

| | ரூ. | அ. |
|---|---|---|
| சம்பந்தர் தேவாரம் (கலிக்கோ) ... ... | 1 | 0 |
| அப்பர் தேவாரம் (கலிக்கோ) ... ... | 0 | 12 |
| சுந்தரர் தேவாரம் (ராப்பர்) ... ... | 0 | 4 |
| திருவாசகம் (ராப்பர்) ... ... | 0 | 2½ |
| திருவாசகம் திருக்கோவை திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகிய ௮, ௯ திருமுறைகள் (கலிக்கோ) ... ... | 0 | 10 |
| தலயாத்திரைப்படம் விளக்கத்துடன் ... ... | 0 | 4 |
| ௸ வர்ணங் கொடுத்தது ... ... | 0 | 6 |
| கந்தபுராண வசனம் ... ... | 2 | 8 |
| சித்தாந்த சாத்திரம் ௧௪ (மூலம்) ... ... | 1 | 0 |
| "சித்தாந்தம்" கலிக்கோ - மலர் ௧,௨,௩,௪ தனித்தனி ... | 2 | 0 |
| கைவல்ய நவநீதம் மூலமும் உரையும் ... ... | 1 | 8 |
| பஞ்சாக்கரமாலை மூலமும் உரையும் ... ... | 0 | 4 |
| திருமயிலை யமக அந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 4 |
| உமாபதி சிவம் திருமுறைத் திரட்டு ... ... | 0 | 2 |
| இயற்கைத் தத்துவ நூலும் சைவ சமயமும் ... ... | 0 | 2 |
| புலால் மறுத்தலுக்கு ஐம்பது காரணங்கள் ... ... | 0 | 2 |
| திருவெம்பாவைக் கருத்து ... ... | 0 | 2 |
| திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் ... | 0 | 2 |
| மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் ... ... | 0 | 2 |
| சமாஜ விதிகள் ... ... | 0 | 1 |
| The Grace of Lord Siva (ஆங்கிலத்தில்) ... ... | 0 | 4 |
| திருவிழாவின் அர்த்தம் (பத்துப்பிரதிகள்) ... | 0 | 2 |
| அறுபத்துமூவர் விளக்கம் ௸ ... | 0 | 2 |
| மகிழடி சேவை விளக்கம் ௸ ... | 0 | 2 |
| தேவாரம் விளக்கம் ௸ ... | 0 | 2 |
| சமய குரவர் சம்பாஷணை ௸ ... | 0 | 2 |
| சந்தான குரவர் வரலாறு ௸ ... | 0 | 2 |
| சைவ சமயிகளுக்கு எச்சரிப்பு ௸ ... | 0 | 2 |
| திருமயிலாப்பூர் தலபுராணம் ௸ ... | 0 | 2 |
| தோத்திரத் தேவாரத்திரட்டு ௸ ... | 0 | 2 |
| சைவ சமயம் ௸ ... | 0 | 2 |

(திருவிழாவின் அர்த்தம் முதல் சைவ சமயம் வரை: இவைகளில் தனிப்பிரதிகள் அனுப்ப இயலாது.)

பாதிவிலையாவது முன்பணம் அனுப்பினாலன்றி வி. பி. அனுப்பப்பட மாட்டாது. தபாற்கூலி, பார்சல் செலவு, ரிஜிஸ்தர் செலவு முதலியன வாங்குவோரே செலுத்த வேண்டும். விவரங்கட்கு ரிப்ளை கார்டு எழுதுக.

சைவசித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை.

இங்ஙனம் :
ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.